வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 09.06.2021 புதன்கிழமை | இதழ் : 188 | பக்கங்கள் : 16

# அரசியல் தஞ்சம் கோரிய 20 தமிழர்களை இன்று திருப்பியனுப்புகின்றது ஜேர்மனி

- தடுப்பு முகாம் முன்பாக தொடர் போராட்டம்
- நாடு கடத்தப்படவிருந்த ஒருவர் நேற்று விடுதலை




பெர்லின், ஜூன் 09

ஜேர்மனியில் அரசியல் அடைக்கலம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் 20 பேரை இன்று புதன்கிழமை பலவந்தமாக நாடுகடத்துவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்திருக்கும் நிலையில், நேற்று இரண்டாவது நாளாக பெருந்தொகையான தமிழ் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தை 15



## கொரோனா அபாயம் நீங்கிய பின்பே பயணத் தடை தளரும்

### இராணுவத் தளபதி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 09

நாட்டின் கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமை தொடர்பில் ஆராய்ந்ததன் பின்னர் நிபுணர்கள் குழுவுடன் பேச்சு ஒன்றை நடத்தி, கொரோனா அபாயம் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பயணக் கட்டுப்பாடு தளர்த்தப் 15

# அமெரிக்க காங்கிரஸ் பிரேரணை உடன் கைவிடப்பட வேண்டும்

### அமெரிக்க துணை தூதுவரை அழைத்து அமைச்சர் தினேஷ் வலியுறுத்தினார்



கொழும்பு, ஜூன் 09

கொழும்பிலுள்ள அமெரிக்க துணைத் தூதுவர் மார்ட்டின் ரிகெலியை வெளிவிவகார அமைச்சுக்கு நேற்று அழைத்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, அமெரிக்க காங்கிரஸில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தையிட்டு இலங்கை அரசாங்கத்தின் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார். 15

# 2,637 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஜூன் 09

நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 637 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 10 ஆயிரத்து 616 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 259ஆக உயர்வடைந்துள்ளது. 15

## அடித்து விரட்டினாலும் அடிவாங்கியேனும் பணிகளை திறம்பட செய்ய வேண்டும்!

### மக்கள் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி இப்படி அறிவுரை

கொழும்பு, ஜூன் 09

"மக்கள் அடித்து விரட்டினாலும், தாக்கினாலும் அனைத்தையும் சமாளித்துக்கொண்டு உங்கள் பணிகளைத் திறம்படச் செய்ய வேண்டும்."

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மக்கள் பிரதிநிதிகளைக் கேட்டுக்கொண்டார்.

சேதன உரப் பாவனையை நோக்கிச் செல்லும்போது எதிர் 15

# 54 பேர் மரணம்



கொழும்பு, ஜூன் 09

இலங்கையில் கொரோனாவால் மேலும் 54 பேர் மரணமானதாக சுகாதாரப் பிரிவினரால் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இதன் மூலம் இலங்கையில் கொரோனாவால் மரணமடைந்தவர்களின் தொகை 1,844 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ். குடாநாட்டில் 31 பேர் உட்பட வடக்கில் 52 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஜூன் 09

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மேலும் 52 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூட முடிவுகளின்படி யாழ். உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 24 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூட முடிவுகளில் யாழ்.மாவட்டத் 15




# தகவல்கள் மக்களிடம் செல்வதை தடுப்பதற்கு அரசு முற்படுகிறதா?

### பாராளுமன்றத்தில் எதிரணி கேள்வி

கொழும்பு, ஜூன் 09

சமூக வலைதளங்களை கட்டுப்படுத்தி தகவல்கள் மக்களிடம் செல்வதை தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அமைச்சின் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடமே இவ்வாறு கேள்வியெழுப்பிய மனுஷ நாணயக்கார மேலும் கூறுகையில்,

சமூக வலைத்தளங்கள் தொடர்பாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பொய் பிரசாரங்களை முன்னெடுத்தால் கைது செய்யப்படுவார்கள் என்று அறி 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

எழுத்தாளர் முருகபூபதி, ஒரு பத்திரிகையாளரும் கூட. வீரகேசரி பத்திரிகையில் ஒப்புநோக்குநராக பணியை ஆரம்பித்து உதவி ஆசிரியராக உயர்ந்தவர். ஓய்வின்றி எழுதிக்கொண்டே இருக்கும் ஓர் எழுத்தாளர்.

அவர் ஒருவரே இன்றும் நமது எழுத்தாளர்களை மறக்காது - அவர்களோடு பழகிய காலங்களை - அவர்கள் பற்றிய மனப்பதிவுகளை தொடர்ந்து எழுதிக்கொண்டிருப்பவர். சில தினங்களுக்கு முன்னர் அவர் எழுதிவரும் 'எழுத்தும் வாழ்க்கையும்' என்ற தொடரின் நாற்பத்தி நான்காவது அத்தியாயத்தை படிக்க முடிந்தது.

அதில், அவர் எழுதியுள்ள தகவல் ஒன்று என்னை ஆச்சரியப்படவைத்தது. அந்தத் தொடரில் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி அவர் பின்வருமாறு எழுதுகிறார்.

"அன்று 1984 ஒக்ரோபர் 31ஆம் திகதி. அன்று மதியத்திற்கு மேல் ஊர் திரும்புவதற்கு தயாராகி, யாழ்ப்பாணத்தில் மல்லிகை ஜீவாவிற்கு பயணம் செல்வதற்கு அவரது அலுவலகம் வந்தேன். அப்போது நண்பர் ஏ.ஜே. கனகரட்னா, பதட்டத்துடன் ஓடி வந்தார். அவர் வானொலி செய்தியைக் கேட்டுவிட்டு வந்து என்னிடமும் ஜீவாவிடமும் சொன்னபோது. 'இன்று காலை வெளியான 'ஈழநாடு'வில் செய்தி வரவில்லையே' என்றேன்.

அப்போது அவரிடமிருந்து கெட்ட வார்த்தை ஒன்று வந்தது. அவர் கீறியிருந்த நேரம். இந்தக் கீறல் பற்றி தெரிந்தவர்களுக்கு தெரியும். அவர் வானொலி செய்தியைக் கேட்டுவிட்டு ஓடிவந்திருந்தார். 'ஈழநாடு'வில் ரொய்ட்டர், பி.ரி.ஐ. செய்திச் சேவை இல்லையா எனக் கேட்டேன்.

'இங்கே.... ஒரு.... இல்லை... ஐஸே'

ஒரு வரலாற்றுப் பதிவை எழுதிக்கொண்டிருக்கும் முருகபூபதி வேண்டுமென்றெ இதனை சேர்த்திருக்க முடியாது. அவர் அத்தகைய எழுத்தாளரும் அல்ல. இந்திரா காந்தி கொல்லப்பட்டது காலை 9.30 மணிக்கு. முருகபூபதி - ஏ. ஜே. கனகரட்னா சம்பாஷணை நடைபெற்றது அன்று மதியம். நள்ளிரவில் அச்சுக்குப்போய் அதிகாலை வெளிவரும் ஈழநாடுவில் காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற அந்தச் செய்தி வந்திருக்கமுடியாது என்பது அன்று முருகபூபதிக்கு தெரியாததல்ல. ரொய்ட்டர், பி.ரி.ஐ. செய்திச் சேவை வசதியுள்ள அவரது வீரகேசரி கூட, இந்திரா சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியை ஒக்ரோபர் 31ஆம் திகதி பத்திரிகையில் வெளியிட்டிருக்க முடியாது. முருகபூபதி அப்படி பேசியிருக்க வாய்ப்பில்லை. அப்படி பேசாத விடயத்தையும் இப்போது எழுதவும் வாய்ப்பில்லை.

முருகபூபதி ஏன் இப்படி எழுதினார் என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சம். இதனைப் படித்தபோதுதான் நமது வரலாறுகள் எல்லாமே இப்படித்தான் எழுதப்படுகின்றது என்பதையும் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. ஈழத்தமிழர் வாழ்வில் அதி உச்ச துயர் படிந்த நாள் என்றால் அது சிங்கள பேரினவாதிகளால் யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்ட நாள்தான்.

ஆனால், அந்த நாள்கூட எது என்பதில் நமது தமிழர்கள் இப்போது பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கின் றார்கள். நேற்றைய தினம் யாழ்ப்பாண மாநகர சபையில் மிக நீண்டகாலம் ஆணையாளராகவும் - விசேட ஆணையாளராகவும் இருந்த, இன்றைய வட மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் ஐயா, பொது நூலகம் எரிக்கப்பட்டது ஜுன் 1ஆம் திகதிதான் என்று ஒரு பக்க விளக்க அறிக்கை வெளியிட வேண்டியிருக்கின்றது. எங்கள் இனத்தின் எதிர்காலத்தை மாத்திரமல்ல, வரலாற்றையும்தான் தொலைத்துவிடப் போகிறோமோ?

- ஊர்க்குருவி

# இலங்கை கடலில் சட்டவிரோதமாக நுழையவில்லை 'எக்ஸ் - பிரஸ் பேர்ள்'

### இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 09

'எக்ஸ் - பிரஸ் பேர்ள்' கப்பல் இரகசியமாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ இலங்கைக் கடற்பரப்பில் நுழையவில்லை என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

அத்தோடு, மோசமான காலநிலை காரணமாகவே கப்பல் தீப்பிடித்திருக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

'குறித்த கப்பல் ஒவ்வொரு மாதமும் இலங்கைக்கும் ஏனைய நாடுகளின் துறைமுகங்களுக்கும் செல்லும் கப்பல்.

தீப்பிடித்த இந்தக் கப்பல் சிங்கப்பூரில் ஆரம்பித்து ஆறு நாடுகளுக்கு பயணிக்கும் கப்பலாகும்.

மே 17ஆம் திகதி வரவேண்டிய கப்பல் மோசமான காலநிலை காரணமாக இரு நாட்களுக்குப் பின்னர் வந்தது.

இதில் 1,466 கொள்கலன்கள் இருந்தன. அதில் 513 கொள்கலன்கள் இலங்கையில் இறக்க வேண்டியவையாகும். ஆகவே, இது ஓர் இரகசியக் கப்பல் என எவரும் கூற முடியாது.

அதேநேரம், கப்பல் விபத்துக்குள்ளானதை அறிந்து கொண்டவுடன் இலங்கைக் கடல் எல்லையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடலில் எதுவிதமான இரசாயனங்களும் கலக்கக்கூடாது என்பதில் கவனமாக இருந்தோம். கடலில் கலக்கப்பட்ட கழிவுகளை நாம் முழுமையாக அகற்றும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

எதிர்வரும் மூன்று நாட்களுக்குள் எமது கடல் பரப்பை முழுமையாகச் சுத்தப்படுத்தி விடுவோம். அதேபோல் நட்டஈடு பெறப்படும். ஆனால், அது உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியாது.

எனினும், இடைக்கால நட்டஈடு ஒன்றைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றோம்" - என்றார். (இ)

### வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும்

# தடுப்பூசி திட்டத்தை அரசு விரைவுபடுத்த வேண்டும்

### ஜனாதிபதியிடம் டக்ளஸ் வலியுறுத்து



கொழும்பு, ஜுன் 09

கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டம் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரைவுபடுத்த வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களுடனான கலந்துரையாடலின் போதே, கடற்றொழில் அமைச்சரினால் குறித்த விடயம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே, 50,000 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டமாக குறைந்தது ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் தடுப்பூசிகளாவது அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார்.

அதேபோன்று, வவுனியா மாவட்டத்திற்கு குறைந்தது ஒரு இலட்சம் தடுப்பூசிகளையும், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு குறைந்தது தலா 50 ஆயிரம் தடுப்பூசிகளையாவது விரைவாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது, கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, கிடைக்கின்ற தடுப்பூசிகள் அனைத்து மாவட்டங்களுக்கும் பாதிப்புக்களின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்ற நிலையில், ஏற்கனவே அமைச்சரவையில் உறுதியளிக்கப்பட்டது போன்று யாழ்ப்பாணத்திற்கான இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்தார்.

மேலும், வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை புரிந்து கொள்வதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, விரை வில் அதற்கான அறிவுறுத்தல் கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# இராமநாதன் நுண்கலைப்பீட பரீட்சைகள் இணையவழியில்

யாழ்ப்பாணம், ஜுன் 09

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நுண்கலைமாணி (பரதம்), நுண்கலைமாணி (சங்கீதம்), நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) ஆகிய நான்கு வருடக் கற்கை நெறிகளின் 2020/2021 ஆம் கல்வியாண்டுக்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி / தெரிவுப் பரீட்சைகள் இணைய வழியாக இடம்பெறவுள்ளன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலைக்கேற்ப அனுமதி / தெரிவுப் பரீட்சைகளை மாற்று ஏற்பாட்டின் படி இணைய வழியாக நடத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களுடனான கூட்டத்தின் பின்னர் தீர்மானித்துள்ளது.

அந்தத் தீர்மானத்துக்கு அமைய யாழ். பல்கலைக் கழகத்தினால் நுண்கலைமாணி (பரதம்) கற்கை நெறிக்கான இணைய வழி அனுமதி / தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமையும், நுண்கலைமாணி (சங்கீதம்) கற்கை நெறிக்கான இணைய வழி அனுமதி / தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிக்கான இணைய வழி அனுமதி / தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமையும் ஆரம்பமாகவுள்ளன.

பரீட்சை நேர ஒழுங்குகள் மற்றும் பரீட்சைக்கான இணைய நிகழ்நிலை இணைப்பு பற்றிய விபரங்கள் யாழ். பல்கலைக்கழக அனுமதிகள் கிளையினால் பதிவு செய்த மாணவர்களின் மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
09.06.2021 புதன்கிழமை
பிலவ வருடம், வைகாசி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370**

# செவி சாய்க்குமா உலகம்?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையில் முதலீடு செய்யுமாறு உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். இலங்கை முதலீட்டு சபையின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றும்போதே, அவர் இந்த கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார். கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே, ஜனாதிபதி இவ்வாறான ஓர் அழைப்பை விடுத்திருக்கின்றார். கொழும்பு துறைமுக நகரத்தின் ஊடாக அதிகளவு முதலீடுகளை கவரமுடியுமென்றே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. ஆனால், கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் மேற்குலக அவதானிகள் சந்தேகங்களை முன்வைத்துவருகின்றனர். குறித்த துறைமுக நகரம், சட்டவிரோத பணச்சலவை மையமாக மாறக்கூடிய வாய்ப்பிருப்பதாக, அமெரிக்க தூதுவர் எச்சரித்திருந்ததை இந்த இடத்தில் நினைவு கொள்ளலாம்.

ஜனாதிபதி ராஜபக்ஷ, அவரது பதவியேற்பு உரையின்போதும் சில நாடுகளைநோக்கி இவ்வாறான அழைப்பை விடுத்திருந்தார். குறிப்பாக, அமெரிக்காவின் தலைமையிலான இந்தோ - பசுபிக் மூலோபாயத்தில் அங்கம்வகிக்கும் நாடுகளான இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை நோக்கி அழைப்பு விடுத்திருந்தார். அதேவேளை, தன்னுடைய வெளிவிவகாரக் கொள்கை தொடர்பிலும் விபரித்திருந்தார். அதாவது, “இலங்கை ஒரு சிறிய நாடு, நாம் பலம்பொருந்திய நாடுகளின் அதிகார போட்டிக்குள் வரவிரும்பவில்லை. நாங்கள் நடுநிலையானதொரு வெளிவிவகாரக் கொள்கையை பின்பற்றவே விரும்புகின்றோம்.”

ஜனாதிபதி இவ்வாறு கூறியிருந்தபோதிலும்கூட, இந்தியாவுடன் ஏற்கனவே செய்துகொண்ட உடன்பாட்டுக்கு அமைவாக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவிற்கு வழங்க முடியவில்லை. துறைமுக தொழிற்சங்களின் எதிர்ப்பை தொடர்ந்து, கிழக்கு கொள்கலன் முனைய உடன்பாட்டிலிருந்து அரசாங்கம் விலகிக்கொண்டது. அதேவேளை, இந்தியாவிற்கு வழங்குவதாக கூறிய பல விடயங்கள் தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே இருக்கின்றன. ஆனால், சீனாவுடனான உடன்பாடுகளில் எந்தவொரு பின்னடைவும் ஏற்படவில்லை. அவ்வாறான பின்னடைவுகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலும் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழலில், மேற்குலக நாடுகள் ஜனாதிபதியின் அழைப்பிற்கு எவ்வாறு பதிலளிக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அதேவேளை, தற்போதைய அரசாங்கம் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான பொறுப்பு கூறலிலிருந்து முற்றிலும் விலகியிருக்கின்றது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைக்க மறுக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மீண்டும் இலங்கை மீது புதியதொரு பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அடுத்த ஜெனிவா கூட்டத்தொடரிலில் இது விவாதிக்கப்படும். தொடர்ந்தும் அரசாங்கம் பிடிவாதமாக இருந்தால், 2012இல் இடம்பெற்றதுபோன்று, இலங்கையின்மீது மேலும் பிரேரணைகள் முன்வைக்கப்படலாம். இது, மேற்குலகில் இலங்கையின் நன்மதிப்பை கேள்விக்குள்ளாக்கும். இவ்வாறானதொரு சூழலில், மேற்குலக நாடுகள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வருமா?

இந்த விடயங்களை தொகுத்து நோக்கினால், ஜனாதிபதியின் அழைப்பை மேற்குலகம் சாதகமாக பார்ப்பதற்கான வாய்ப்பு பிரகாசமாக இல்லை. ஏனெனில், மேற்குலகின் மனித உரிமை மற்றும் ஜனநாயக விழுமியங்கள் பற்றிய எதிர்பார்ப்புடன் கொழும்பு ஒத்துப்போக மறுக்கின்றபோது, மேற்குலகு இலங்கை தொடர்பில் மகிழ்சியடையப்போவதில்லை. மேற்குலகுடன் ஒத்துப்போகும் அரசாங்கம் வரும்வரையில், மேற்குலகம் பட்டும்படாத ஓர் உறவை பேணிக்கொள்ளவே முயற்சிக்கும்.

# ‘சிங்கள தீவுக்கு’ பாரதி பாடல்மூலம் பாலம் அமைத்த கோட்டாபய

- அலசுவது **இராஜதந்திரி** -

உலக உணவு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. உலக உணவு மற்றும் விவசாய நிறுவனம் தெரிவித்துள்ளதென்னவெனில், இன்னும் சிலவருடங்களில் உணவுப் பஞ்சம் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் பலமாக இருப்பதாகவும், இதற்கு உலக சனத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதே முக்கிய காரணமாக இருக்கின்றதென்றும் குறிப்பிட்டுள்ளது.

இதுதவிர, சுற்றாடலில் ஏற்படும் பாதிப்பு, காலநிலை மாற்றங்கள் போன்றவையும் உலக உணவு உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளாக இருக்கின்றன. அத்துடன், நன்னீர் நிலைகள் விரைந்து மாசடைந்துவருகின்றன. இதற்கு நல்ல உதாரணமாக, இந்தியாவின் புனித கங்கையாறு, வைகையாறு என்பவை மானிடக்கழிவுகள், இரசாயனக் கழிவுகளால் பெரிதும் மாசடைந்து வருகின்றனவென்று இந்திய சூழலியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில், உலக உணவு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது முகநூல் வாயிலாக விடுத்துள்ள செய்தியில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ‘தனியொருவருக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்’ என்ற கவிதையை குறிப்பிட்டுள்ளார்.

**சிந்து நதியின்மிசை நிலவினிலே**

பாரதியாரின், ‘சிந்து நதியின்மிசை நிலவினிலே...’ என்று ஆரம்பிக்கும் பாடல் வரிகளிலே ‘சிங்களத் தீவினிற்கோர் பாலம் அமைப்போம்’ என்ற வரிகளையும் இணைத்துள்ளார்.

இந்தப்பாடல் ஒரு மிகவும் பிரபலம் பெற்ற பாடலாகவும், இந்திய பிராந்தியங்களில் ஒற்றுமையை வலியுறுத்துவதோடு சிங்களத் தீவினிற்கு பாலம் அமைப்போம் என்ற பாடல்வரி இலங்கையையும் உள்ளடக்குவதாகவும் இருக்கின்றது.

மகாகவி சுப்ரமணிய பாரதியார் ஒரு தீர்க்கதரிசனம்மிக்க கவிஞராக விளங்கியிருந்தார். அவரது பாடல்கள் யாவும் இந்திய சுதந்திர போராட்டத்துக்கு ஆதரவளிப்பதாகவும் மனிதாபிமானத்தை வலியுறுத்துவதாகவும் இந்திய பிராந்திய நலன்களை பேணி ஒற்றுமையை வளர்ப்பதாகவும் அமைந்துள்ளன.

**பாரதியின் பரந்த பார்வை**

மகாகவி பாரதியாரின் ‘தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினையே அழித்திடுவோம்’ என்ற கவிதை வரிகள் உலக உணவு ஸ்தாபனத்தின் மகாவாக்கியமாக கூட அமைவதற்கு பொருத்தமானதாகவே இருக்கின்றது. ஏனெனில், அவர் இந்தியர்களை நோக்கியோ அல்லது உலகின் ஒரு குறிப்பிட்ட சாராரை நோக்கியோ இக்கவிதை வரியை குறிப்பிட்டிருக்கவில்லை. ஜகம் என்று அவர் குறிப்பிட்டுள்ளமை முழு உலகையுமே சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றது.

இவ்வகையில் இக்கவிதை வரிகளின்



ஆழமான கருத்துக்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உணர்ந்துகொண்ட நிலையிலேயே, தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினையே அழித்திடுவோம் என்ற மேற்கோளை குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் அவர் தம்மையும் உலக மானிட சமூகம்குறித்து அக்கறைகொள்ள வைத்துள்ளதையே அவதானிக்கமுடிகின்றது. கோட்டாபய ராஜபக்ஷ மாத்திரமல்ல. இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிகூட அடிக்கடி திருக்குறளை மேற்கோள்காட்டி அடிக்கடி பேசுவதுண்டு.

**மோடிக்கு பிடித்தமான குறள்**


பிரதமர் நரேந்திர மோடிக்கு பிடித்தனமான குறளாக இருப்பது ‘இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அவன் கண் விடல்’. இதற்கு அர்த்தமென்னவெனில், ‘இந்த செயலை இக் கருவியால் இன்னவன் செய்துமுடிப்பான் என்று ஆராய்ந்த பிறகே அவனிடம் அத்தொழிலை ஒப்படைக்கவேண்டும்’ என்பதாகும். இதுதவிர, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தமது பாராளுமன்ற வரவு - செலவுத்திட்ட உரைகளில்கூட புறநானூறை மேற்கோள்காட்டி உரையாற்றியிருக்கின்றார். அந்த புறநானூற்று பாடலிலே நிர்மலா சீத்தாராமன் குறிப்பிட்டவைகூட உணவின் மகத்துவத்தை எடுத்தியம்புகின்றன.

**புறநானூறு பாடல்**

யானைபுகுந்த விளை நிலம் குறித்து இந்திய நிதியமைச்சர் குறிப்பிடுகையில், ‘யானை புகுந்த ஒரு நெல் விளை நிலத்திலே அந்த யானைக்கு உண்பதற்கு ஒரு சிறிதளவு நெல் போதுமானதாக இருக்கும். ஆனால், அந்த யானை தனக்கு வேண்டியதோடு மட்டும் நின்றுவிடாது, முழு நிலத்தையும் மிதித்து நாசமாக்கி, ஏனையோருக்கும் பயனற்றதாக செய்துவிடும்’ என்ற கருத்தையே நிதியமைச்சர் சீதாராமன் கூறிய புறநானூறு பாடல்வரிகள் எடுத்தியம்புவதாக இருக்கின்றன.

புறநானூறு, திருக்குறள், பாரதியார் பாடல்கள் மட்டுமல்ல. தமிழிலேயுள்ள ஐம்பெரும் காப்பியங்கள்கூட இங்கே பௌத்த மதத்தின் பெருமையை எடுத்துக் கூறுவனவாகவே இருக்கின்றன. (02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
நாள் முழுவதும் சிறப்பாக அமைந்து புதிய நன்மை கைகூடும். அனுகூலமான சூழ்நிலை நிலவும். பரிசு ஒன்று காத்திருக்கிறது. வளைந்து கொடுத்து சிறப்படைவீர்கள். சொத்து சேர்க்கை நிகழும்.

**இடபம்**
ஆவணங்களைப் பாதுகாப்பாக வைப்பது நல்லது. புது விஷயங்களைக் கற்பீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் வெளியாட்களின் தலையீடு வேண்டாம்.

**மிதுனம்**
வீடு, நிலம் பற்றிய முக்கியமான வர்த்தகம் முடியும். உறவினர்களால் நலம் உண்டாகும். கனவு நனவாகும். உழைப்பின் மூலம் நினைத்த உயரத்தை எட்டுவீர்கள்.

**கடகம்**
பொது நலத்துக்காக உழைத்து கைதட்டல் பெறுவீர்கள். சொத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும். பேச்சில் கவனம் தேவை. சந்தோஷமான காரணத்தால் பிள்ளைகள் உங்களைவிட்டுப் பிரியக்கூடும்.

**சிம்மம்**
வளர்ச்சி காண்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் அமையும். பணியாளர்களின் நிலை உயரும். சந்தோஷமும் நிம்மதியும் மீளும். வீசா தொடர்பான பிரச்னை தீர்ந்து நிம்மதி ஏற்படும்.

**கன்னி**
முன்னேற்றம் காண்பீர்கள். சண்டை சச்சரவுகள் தீரும். துணிச்சலான செயலில் ஈடுபாடு வரும். சாதனை செய்வீர்கள். சிறு உபாதை ஏற்பட்டு சிகிச்சையால் குணமடைவீர்கள்.

**துலாம்**
பிரச்னைகள் தலைதூக்க நீங்கள் காரணமாக இருக்காதீர்கள். அலைச்சலும் செலவுகளும் சிறு களைப்பை ஏற்படுத்தும். தந்தையால் நன்மை உண்டு. பிள்ளைகளின் நடத்தையில் கவனம் தேவை.

**விருட்சிகம்**
பொருளாதார நிலை ஏற்ற, இறக்கமாகவே இருக்கும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. நட்பு வட்டம் விரியும். உன்னிப்பாக செயல்பட்டு தொழிலில் வரும் நஷ்டத்தை தவிர்ப்பீர்கள்.

**தனுசு**
அதிர்ஷ்ட வாய்ப்புக்களை எண்ணி ஏமாற வேண்டாம். பணியாளர்கள் யாருக்கும் பிணை கொடுக்க வேண்டாம். நட்பினால் நன்மை ஏற்படும். சிறு சிறு பிரச்னைகள் விலகும்.

**மகரம்**
பண விஷயத்தில் நண்பர்கள் ஓரளவு உதவுவார்கள். உடன்பிறந்தவர்களால் ஏற்பட்ட மன அமைதி நீங்கும். ஆன்மிக ஈடுபாட்டால் நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

**கும்பம்**
பெண்களால் ஏற்பட்டிருந்த சங்கடங்கள் நீங்கும். துணிச்சலான நடவடிக்கையால் பிரச்னையில் இருந்து மீளுவீர்கள். சரியான பாதையைத் தேர்ந்தெடுத்து வெற்றி பெறுவீர்கள்.

**மீனம்**
அலுவலக செயல்பாடுகளில் அதிக வேகம் வேண்டாம். விழிப்புணர்வு தேவை. கலைத்துறையில் ஈடுபாடு வரும். முன்னேற்றமான சூழ்நிலை உண்டு. உழைப்பால் நன்மை வரும்.

# தமிழ்வழி கல்வியை கட்டாயமாக்க சட்டத்திருத்தம் கொண்டு வாருங்கள்

## மு.க.ஸ்டாலினுக்கு, ராமதாஸ் வேண்டுகோள்

சென்னை, ஜுன் 09

“தமிழ்வழி கல்வியை கட்டாயமாக்க சட்டத்திருத்தம் கொண்டு வருவது அவசியம். அதை சட்டப்பேரவையில் நிறைவேற்ற வேண்டும்” என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

“தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட நாளில் தமிழ் உள்ளிட்ட எட்டாவது அட்டவணை மொழிகள் அனைத்தையும் தேசிய ஆட்சி மொழிகளாக அறிவிக்க செய்யப்போவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். அவரது மொழியுணர்வு பாராட்டத்தக்கது. அதே நேரத்தில் அந்த உணர்வு அவரது அடி மனதிலிருந்து எழுந்ததாக இருந்தால், முதல் கட்டமாக தமிழ்நாட்டில்உள்ள அனைத்து பள்ளிகளிலும் பள்ளி இறுதி வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழியை கட்டாய பயிற்று மொழியாக அறிவிக்க உடனடியாக சட்டம் இயற்ற வேண்டும்.

தமிழை கட்டாய பயிற்று மொழியாக்கும் சட்டம் உயர் நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதையும் தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

இந்த சட்ட திருத்தத்தையும், தமிழை பள்ளி இறுதி வகுப்பு வரை படிப்படியாக கட்டாய பயிற்று மொழியாக்கும் சட்டத்தையும் சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடரிலேயே தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும். இதன் மூலம் தமிழ் மொழி மீதான பற்றை தி.மு.க. அரசு நிரூபிக்க வேண்டும்” என அதில் கூறப்பட்டுள்ளது.



# தமிழகத்தில் கொரோனா உயிரிழப்பு தொகையை குறைத்துக்காட்டவில்லை

## சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவிப்பு

சென்னை, ஜுன் 09

தமிழகத்தில் கொரோனா உயிரிழப்புகள் குறைத்து காட்டப்படவில்லை என தமிழக சுகாதாரத் துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவரிடம் கொரோனா பாதிப்பால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை குறைத்து காட்டப்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அவர், கொரோனா பாதிப்பால் உயிரிழந்தவர்கள் குறித்து ஒரு மாதத்திற்கு பிறகு தகவல் வந்தாலும், அதனை சேர்த்து தினசரி கொரோனா உயிரிழப்புகள் கணக்கில் காட்டப்படுகின்றன. உயிரிழப்பு எண்ணிக்கை குறைத்து காட்டப்படவில்லை என்று தெரிவித்தார்.

மேலும் இந்த தகவல்கள் அனைத்து ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக அறிவிக்கப்பட்டு வருவதாகவும், சில மருத்துவமனைகளில் உயிரிழப்பு எண்ணிக்கையை வழங்க தாமதம் ஏற்படுவதாகவும் ராதாகிருஷ்ணன் கூறினார்.

# தமிழ்நாட்டின் உரிமைகளை மதிக்காத நியூட்ரினோ திட்டத்தை அனுமதிக்கக் கூடாது

## வைகோ வலியுறுத்தல்

சென்னை, ஜுன் 09

தமிழ்நாட்டின் உரிமைகளையும், தமிழ் மக்களின் உணர்வுகளையும் மதிக்காமல், மத்திய அரசு நியூட்ரினோ திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகின்றது, எனவே, இந்தத் திட்டத்திற்காகத் தமிழக அரசு வழங்கிய நிலத்தையும் திரும்பப்பெற வேண்டும் என வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

“இந்த உலகில் பழம்பெருமை மிக்க இடங்களுள் ஒன்றாக, ஐ.நா.மன்றம் அறிவித்து இருக்கின்ற, மேற்குத் தொடர்ச்சி மலை, தமிழ்நாட்டின் நீர் ஆதாரமாகத் திகழ்கின்றது.

ஆனால், கடந்த ஒரு நூற்றாண்டாக அங்கே கடுமையான ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. யானைகளின் காட்டு வழித் தடத்தை மறித்துக் கட்டப்பட்ட நூற்றுக்கணக்கான சுற்றுலா விடுதிகளை, முழுமையாக இடித்துத் தகர்க்க வேண்டும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்து இருக்கின்றது.

இந்த நிலையில், தேனி மாவட்டம் பொட்டிப்புரம் கிராமத்தில் உள்ள அம்பரப்பர் மலையில், இலட்சக்கணக்கான டன் கருங்கற் பாறையை வெட்டி எடுத்து குகை குடைந்து, அங்கே நியூட்ரினோ துகள்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக ஆராய்ச்சி மையம் அமைக்கும் முயற்சியில், கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து மத்திய அரசு தீவிரம் காட்டி வருகின்றது.



இதனால் முல்லைப் பெரியாறு, இடுக்கி ஆகிய அணைகளில் விரிசல் ஏற்படும்.

தமிழ்நாட்டின் உரிமைகளையும், தமிழ் மக்களின் உணர்வுகளையும் மதிக்காமல், மத்திய அரசு இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகின்றது.

எனவே, இந்தத் திட்டத்திற்காகத் தமிழக அரசு வழங்கிய நிலத் தையும் திரும்பப்பெற வேண்டும் என வலியுறுத்துகின்றேன்”.

இவ்வாறு வைகோ வலியுறுத்தியுள்ளார்.

# ஆடைத் தொழிற்சாலை பஸ்களை திருப்பியனுப்பிய முல்லை. மக்கள்

## மூன்று பேர் பொலிஸாரால் கைது!

முல்லைத்தீவு, ஜூன் 09

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா அதிகரிக்கக் காரணமாக இருந்த புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.**

**இதற்கு பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.**

நேற்றுமுன்தினம் காலையில் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் பயணித்த பஸ்ஸை மறித்த புதுக்குடியிருப்பு பிரதேச சபை உபதவிசாளர் உள்ளிட்ட பத்து பேர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று புதுக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ்களை சுதந்திரம் பகுதியில் மக்கள் தடுத்து நிறுத்தி திரும்பி அனுப்பியுள்ளனர்.

இந்நிலையில் பஸ்களை திருப்பி அனுப்பிய மூன்று பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் நேற்று புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்துள்ள நிலையில் மிக குறைவான ஊழியர்களே பணிக்கு சமுகமளித்துள்ளனர் என்று தெரியவருகிறது.

ஆடைத் தொழிற்சாலையை மூட எடுத்த முயற்சிகள் பயனளிக்காத நிலையில், ஊழியர்களை கடமைக்கு செல்லாமல் தவிர்க்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)



# தனிமைப்படுத்தப்பட்டவர்களை ஏற்றி வந்த சொகுசு பஸ் விபத்து!

வவுனியா, ஜூன் 09

வவுனியா ஓமந்தை பனிக்கன்நீராவிப் பகுதியில் தனிமைப்படுத்தலுக்கு ஆட்களை ஏற்றிச் சென்று பஸ் ஒன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகியது.

இந்த பஸ் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய பயணிகளை அழைத்துக்கொண்டு கிளிநொச்சி, பூநகரி தனிமைப்படுத்தல் நிலையம் நோக்கி சென்றுகொண்டிருந்தது.

இதன்போது ஓமந்தை பனிக்கன்நீராவிப் பகுதியில் வீதிக்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனத்துடன் மோதியதில் விபத்துக்குள்ளாகியது.

பஸ்ஸில் 7 பேர் பயணம் செய்த நிலையில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்துக்கு இவ்வாரம் கொரோனா தடுப்பூசி வராது!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ்ப்பாணத்திற்கு இரண்டாம் கட்டத்துக்குரிய தடுப்பூசிகள் இந்த வாரம் அல்லது தற்போதைக்கு வழங்கப்படமாட்டாது என கொழும்பு சுகாதார அமைச்சு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு நேற்றுமுன்தினம் மதியம் திடீரென அறிவித்துள்ளது.

இலங்கைக்கு இந்த மாதம் முதல் வாரத்தில் 20 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறும் நிலையில் அவற்றில் 50 ஆயிரம் தடுப்பூசிகள் யாழ்.மாவட்டத்துக்கு இரண்டாம் கட்டத்துக்கு வழங்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றுவது தொடர்பில் ஆராயும் கூட்டம் இடம்பெற்று கொண்டிருந்த போது இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் இந்த வாரமோ அல்லது இப்போதைக்கோ வழங்கப்படமாட்டாது என்ற விடயம் கொழும்பு சுகாதார அமைச்சு அதிகாரிகளால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய தடுப்பூசி திட்டத்துக்கு அமைவாக 14 இலட்சம் பேர், சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுள்ளனர். அவர்களுக்கு இரண்டாவது டோஸ் ஏற்றுவதற்கே இலங்கைக்கு இன்று வரும் 10 இலட்சம் தடுப்பூசிகளும் பயன்படும். அதேபோன்று கடந்த ஞாயிறு வந்த 10 இலட்சம் தடுப்பூசிகளில் 4 இலட்சம் தடுப்பூசிகள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன என கூறப்பட்டுள்ளது. (அ)

# ஓய்வூதியம் பெறுவோர் வங்கிக்கு செல்வதற்கு அரசு விசேட ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 09

ஓய்வூதியம் பெறுவோர் வங்கிக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்ய முப்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர்களின் உதவியுடன் போக்குவரத்து சேவைகள் வழங்கப்படும் என இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

இதன்படி, ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்கும் வங்கிகள் எதிர்வரும் வியாழக்கிழமை திறந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மரக்கறி, பழங்களை இலவசமாக வழங்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 09

பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள காலப் பகுதியில் விற்பனை செய்ய முடியாத மேலதிக மரக்கறிகள் மற்றும் பழங்களை கொள்வனவு செய்து, அரசாங்கத்தினூடாக விநியோகிக்கும் திட்டத்தை செயற்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் வருமாறு:-

அரசாங்கத்தால் நாடளாவிய ரீதியில் விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையால் தங்களது உற்பத்திகளை குறிப்பாக மரக்கறிகள் மற்றும் பழவகைகளை வழக்கமான முறையில் போக்குவரத்துச் செய்யவும் விற்பனை செய்யவும் இயலாமையால் அழிவடைந்து போகும் நிலையில், சிறிய மற்றும் நடுத்தர அதேபோல் பெரு விவசாயிகள் பெரும் பொருளாதார பிரச்னைக்கு முகங்கொடுத்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

மேலும், நுகர்வோர் நியாய விலையில் தரமான மரக்கறிகள் மற்றும் பழவகைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதற்கமைய, பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள சூழலில் விற்பனை செய்ய இயலாத தொகையான மரக்கறிகள் மற்றும் பழவகைகளை மாவட்ட விலைமனுக் குழுவின் விலையின் அடிப்படையில் மாவட்டச் செயலாளர்கள், அரசாங்க அதிபர்கள் மூலம் கொள்வனவு செய்வதற்கும், அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட தொகையான மரக்கறிகள் மற்றும் பழவகைகளை பயணத்தடை முடிவுறும் வரை கோவிட் சிகிச்சை நிலையங்களுக்கும், அனைத்து அரச மருத்துவமனைகளுக்கும், முப்படையினர் மற்றும் இடம்பெயர்ந்துள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கும், வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கும் தேவைக்கேற்ப இலவசமாக வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# சலுகை விலையில் பொருட்களை சதொச மூலம் விநியோகிக்க முடிவு

கொழும்பு, ஜூன் 09

துறைமுகத்தில் விடுவிக்கப்படாமல் இலங்கை சுங்கப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்களை லங்கா சதொசவின் ஊடாக பொதுமக்களுக்கு சலுகை விலையில் விநியோகிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, சுங்கத் திணைக்களத்தின் கையிருப்பில் உள்ள மேற்படி அத்தியாவசிய உணவுப் பொருட்களை பொது மக்களுக்கு விநியோகம் செய்யும் நோக்கில் சதொசவிடம் கையளிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# திருட்டில் ஈடுபட்டவர் உரும்பிராயில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 09

பயணத் தடை நடைமுறையிலிருந்த நேரத்தில் உரும்பிராய் பகுதியில் திருட்டில் ஈடுபட்ட ஒருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களை தாம் கைப்பற்றியுள்ளனர் என்றும், கைது செய்யப்பட்டவர் விசாரணையின் பின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் எனவும் பொலிஸார் மேலும் கூறினர். (ஐ-3)

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறினார்களென 1,028 பேர் கைது



கொழும்பு, ஜூன் 09

நேற்றுக் காலை வரையான 24 மணித்தியாலத்தில் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 1,028 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

முகக்கவசம் அணியாமை, சட்டவிரோதமான முறையில் மாகாண எல்லைகளை கடந்தமை மற்றும் சமூக இடைவெளி பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 25,886 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் விதிமுறைகளை மீறுபவர் களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண எச்சரித்துள்ளார். (அ)

# சஜித்தான் தலைவர்!

## நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றம்



**கொழும்பு, ஜூன் 09**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் யோசனை ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற றப்பட்டுள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக்குழுக் கூட்டம் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதன்போது கொரோனா நெருக்கடி மற்றும் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் நடவடிக்கைகள் தொடர்பில் சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகா, மனோ கணேசன், பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர் எனவும், இதனால் ஐக்கிய மக்கள் சக்தி இரண்டுபடக்கூடும் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவ்விடயம்குறித்தும்கவனத்செலுத்தப்பட்டது. இதன்போது சம்பிக்க, மனோ, ஹக்கீம் உள்ளிட்டவர்கள் இணைந்து சஜித்துக்கு நம்பிக்கை தெரிவிக்கும் யோசனையை முன்வைத்துள்ளனர். சரத் பொன்சேனா, லக்ஷ்மன் கிரியல்ல உள்ளிட்டவர்கள் அதனை வழிமொழிய, யோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## அடை மழை தொடரும்

# ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் 18 பேர் பலி!

கொழும்பு, ஜூன் 09

அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18ஆக அதிகரித்துள்ளது. இவர் காயமடைந்துள்ளனர். ஒருவர் காணாமல்போயுள்ளார் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று காலை விடுத்துள்ள நாளாந்த நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 10 மாவட்டங்களில் 52 ஆயிரத்து 695 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 7 ஆயிரத்து 882 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், ஆயிரத்து 39 வீடுகள் பகுதியளவும், 20 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன என்றும் மேற்படி மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 ஆயிரத்து 360 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 164 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கம்பஹா, இரத்தினபுரி, கொழும்பு, புத்தளம், களுத்துறை, நுவரெலியா, கேகாலை, காலி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் வாழ்பவர்களே சீரற்ற கால நிலையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, தென்மேல் பருவப்பெயர்ச்சி மழை இன்றும் அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 100 மி.மீ. வரையான மழைவீழ்ச்சி பதிவாகலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

# ஓட்டோவில் சென்றோரிடம் வழிப்பறி கொள்ளை முயற்சி

## விமானப்படை சிப்பாய்கள் மூவர் கைது

கொழும்பு, ஜூன் 09

ஓட்டோவில் சென்றுகொண்டிருந்தவர்களிடம் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட முயன்ற குற்றச்சாட்டில் விமானப்படைச் சிப்பாய்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓட்டோ ஒன்றில் இருவர் பயணித்துக் கொண்டிருந்தபோது அவர்களை வழிமறித்து அவர்கள் வசமிருந்த ஒரு இலட்சம் ரூபாய் தொகையைக் கொள்ளையிட முயன்ற விமானப்படைச் சிப்பாய்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விமானப்படை சிப்பாய்கள் மூவரும் கற்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# 17 கடலாமைகள் கரையொதுங்கின!

கொழும்பு, ஜூன் 09

கடந்த சில நாட்களில் மொத்தமாக 17 கடலாமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன. வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் கற்பிட்டி முதல் அம்பாந்தோட்டை வரையான கரையோரப் பகுதிகளில் ஆமைகளின் உடல்கள் இருப்பதைக் கண்டறிய மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், கடலாமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளமை குறித்து, நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர். மேலும், மூன்று டொல்பின்கள் இறந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கரையொதுங்கின என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 1,000 பேருக்கு தடுப்பூசி

மட்டக்களப்பு, ஜூன் 09

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஆயிரம் பேருக்கான தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோவிட் தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு மற்றும் ஏறாவூர் பகுதிகளில் நேற்று இந்த கோவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நேற்று பிரதேச செயலக, மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், உள்ளூராட்சி ஊழியர்களுக்கு கோவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நா. மயூரன், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயம் ஊடாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகள் மக்களுக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் இதன்போது ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

# 3ஆம் தர விமர்சனத்துக்கு ஹேமந்த ஹேரத் உடனடியாகவே மன்னிப்பு கோரவேண்டும்

## ஊடக அமைப்புகள் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 09

கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களில் பெரும்பாலானோர் மூன்றாம் தர (third-class) செயல்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் வெளியிட்ட கருத்துக்கு இலங்கை ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு தமது ஆழ்ந்த அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சொற்பிரயோகம் தொடர்பில் பாதிக்கப்பட்ட ஊடகவியாலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடமும் ஊடக சமூகத்தினரிடமும் ஹேமந்த ஹேரத் மன்னிப்பு கோர வேண்டும் எனவும் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களில் பெரும்பாலானோர் மூன்றாம் தர (third-class) ஊடகவியலாளர்கள்' என நீங்கள் தெரிவித்த கருத்து தொடர்பில் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு தமது ஆழ்ந்த அதிருப்தியையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

மேலும் மக்களின், நாட்டின் நலனிற்காக கடமையாற்றி அதற்காக உயிர்நீத்த தியாகிகளான ஊடகவியலாளர்களை நீங்கள் அவமானப்படுத்தும் மற்றும் நிந்திக்கும் விதத்தில் கருத்து தெரிவித்தமையானது கவலையளிக்கும் விடயமாகும்.

வரலாறு நெடுகிலும் ஊடகவியலாளர்களுக்கு நிகழ்ந்துள்ள அநீதிகளுக்கு (கொலை, வலிந்து காணாமல் ஆக்கப்படல், தாக்கப்படுதல்) இன்று வரை நீதி கிடைக்காமைக்கு பிரதான காரணமாக காணப்படுவது அவர்களின் செயற்பாடுகளை தடுக்க வேண்டுமென்றே சில தரப்புகளால் நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் என்பதே எமது நம்பிக்கையாகும்.

ஜூன் 3 ஆம் திகதி சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நிகழ்ந்த செய்தி மாநாட்டை தொடர்ந்து, அன்றைய கருப்பொருளுக்குப் பொருந்தாத விதத்தில் மீண்டும் மீண்டும் ஊடகவியலாளரொருவர் கேள்வி எழுப்பியதை தொடந்து நீங்கள் மிக கோப உணர்ச்சியுடன் குறித்த ஊடகவியலாளரை குறிவைத்து இக்கருத்தை தெரிவித்ததாக அறிய முடிகிறது.

இருப்பினும், சுகாதார அமைச்சின் ஊடக செய்தித் தொடர்பாளர் என்ற ரீதியில் குறித்த செய்தி மாநாட்டில் கலந்துகொண்டு, அநீதிகளுக்கு பலியான ஊடகவியலாளர்கள் தொடர்பாக தெரிவித்த கருத்து ஊடக சமூகத்தின் மத்தியில் மிக்க அதிருப்தி அளிக்கும் விடயமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க செயல்படும் ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு உட்பட நீதி கோரும் வெவ்வேறு அமைப்புக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பத்தினர் குறித்த சொல் பிரயோகம் தொடர்பில் ஆழ்ந்த வேதனை அடைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

'தேர்ட் க்ளாஸ் (மூன்றாம் தர) வேலை' மற்றும் 'க்ளாஸ்' குறித்து உங்கள் வரைவிலக்கணம் தொடர்பில் தர்க்கத்திற்கு செல்ல நாம் முற்படவில்லை. எவ்வாறாயினும், நீங்கள் ஒரு பொறுப்பான அதிகாரியாக தெரிவித்த கருத்து தொடர்பில் பாதிக்கப்பட்ட ஊடகவியாலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடமும், ஊடக சமூகத்தினரிடமும் மன்னிப்பு கேட்பது தாரக கடமை என ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு நம்புவதுடன் அவ்வாறு குறித்த சொல் பிரயோகம் தொடர்பில் தமது ஆழ்ந்த இரங்கலை பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிப்படுத்துமாறும் வலியுறுத்துவதுடன், மேலும் இந்த கடிதம் ஊடகங்களுக்கும் வெளியிடப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்-என்றுள்ளது.

# ஒட்சிசன் தேவையான தொற்றாளர் நான்கரை மடங்கால் அதிகரிப்பு!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 09

கொரோனா தொற்றாளர்களில் ஒட்சிசன் தேவைப்படுவோர் மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை நான்கரை மடங்கினால் அதிகரித்துள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அந்த சங்கத்தின் ஊடகக் குழு உறுப்பினரான மருத்துவ நிபுணர் வாசன் ரட்ணசிங்கம் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதனால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையும் அசாதாரணமான வகையில் அதிகரித்து வருகின்றன.

தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் அதிதீவிர பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளபோதிலும், மக்களிடமிருந்து அதற்குப் போதியளவான ஒத்துழைப்பு கிடைக்கப்பெறவில்லை.

மக்களின் ஒத்துழைப்பு கிடைத்தால் மாத்திரமே தற்போதைய நெருக்கடிநிலையை ஓரளவிற்கேனும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியும். மாறாக மக்கள் ஒத்துழைப்பு வழங்காவிட்டால், சட்டங்களைப் பயன்படுத்திக்கூட நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதென்பது கடினமான விடயமேயாகும்.

இதேபோன்று அண்மைக் காலத்தில் கொரோனா தொற்றாளர்களில் ஒட்சிசன் தேவை உயர்வாகக் காணப்படுவோரின் எண்ணிக்கையும் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்றது.

கடந்த காலங்களுடன் (ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இனங்காணப்பட்ட தொற்றாளர்கள்) ஒப்பிடுகையில் இலங்கையில் ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை 441 சதவீதத்தினால் (நான்கரை மடங்கு) அதிகரித்துள்ளது.

தென்கிழக்காசிய நாடுகளைப் பொறுத்தவரையில் ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் நோக்குகையில் நேபாளம் முதலிடத்திலும் வியட்நாம் இரண்டாவது இடத்திலும் இலங்கை மூன்றாவது இடத்திலும் இருக்கின்றது.

இதிலிருந்து நோயின் தீவிரம் அதிகரித்து வருகின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இதனால் இனிவரும் காலங்களில் அதிகளவான மரணங்கள் பதிவாகக்கூடும் - என்றார்.

(ஐ)

# அடுத்த பாராளுமன்ற அமர்வில் ரணிலே எதிர்க்கட்சி தலைவர்!

## அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 09

அடுத்த பாராளுமன்ற அமர்வில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்வார். அவர் பாராளுமன்றத்திற்கு வந்தவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் 15 உறுப்பினர்கள் அவருடன் இணைவர். சிலர் ஒதுங்கிக்கொள்ளவுள்ளனர். ஆகவே, அடுத்த எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவே என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள் இவ்வாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

மேலும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் பாராளுமன்றத்திற்கு வரவுள்ளார். அவர் பாராளுமன்றத்திற்கு வரும் நிலையில் எதிர்க்கட்சியில் இருந்து 15 பேர் ஆதரவு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இன்று (நேற்று) ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழு கூடி அவசர அவசரமாக பிரேரணை ஒன்றை நிறைவேற்றி சஜித் பிரேமதாஸவே எதிர்க்கட்சி தலைவர் என்ற தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

ஆனால், சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் அதற்கு ஆதரவளிக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தியுள்ளனர். அதிலும் பத்து பேர் ரணிலை ஆதரித்து கையொப்பமிட்டுள்ளனர். ஆகவே, அடுத்த எதிர்க்கட்சி தலைவர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இன்னும் ஒருவார காலமே உள்ளது. சரியாக ஒரு வார காலத்தில் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்திற்கு வருவார். அடுத்த பாராளுமன்ற அமர்வில் ரணில் விக்கிரமசிங்கவே எதிர்க்கட்சி தலைவர். இப்போதும் பிரபல ஹோட்டல் ஒன்றில் முக்கிய சிலர் ரணிலுடன் பேச்சு நடத்துகின்றனர் என்று அறிந்துகொண்டேன் - என்றார்.

(ஐ)




# வீடு புகுந்து திருடிய இருவர் நேற்று கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழில் பயணத் தடை நடைமுறையிலிருந்த வேளையில் வீடுகளுக்குள் புகுந்து திருட்டில் ஈடுபட்ட இருவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

கச்சேரி - நல்லூர் வீதியில், வீடொன்றின் யன்னலை உடைத்து உள்ளே சென்று மடிக்கணனி , கைபேசி, சைக்கிள் என்பவற்றை திருடினர் என்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரி, குருநகர் பகுதிகளை சேர்ந்த இருவர் நேற்று யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், அவர்கள் மேலும் ஒரு வீட்டில் திருடினர் என்றும். அங்கும் மடிக்கணணி, கைபேசி போன்ற பொருட்களை திருடினரெனவும் கூறியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து அவர்களிடமிருந்து, 2 மடிக்கணனிகள், 2 கைபேசிகள், 2 சைக்கிள்கள் 50 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை பொலிஸார் எடுக்கவுள்ளனர். (ஐ-3)

# கால்நடைகளுக்கான தீவனத்தை விநியோகிக்க ஏற்பாடு செய்யுங்கள்!

## செல்வம் எம்.பி அரச அதிபர்களுக்கு கடிதம்

மன்னார், ஜூன் 09

வன்னி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளுக்கான தீவனத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்.

பசு மாடுகள் வளர்ப்பின் நலன் கருதி அவற்றுக்கான தீவனத்தைப் பெற்றுக் கொடுக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறுகோரி வன்னி மாவட்டத்தில் உள்ள அரசாங்க அதிபர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த அரசாங்க அதிபர்களுக்கு அவர் அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

வீட்டில் கால்நடைகளை வளர்த்து வருபவர்கள், பண்ணையாளர்கள் குறிப்பாக பால் தரும் நல்லின பசு மாடுகள் வளர்ப்பை வாழ்வாதாரமாக கொண்டு அதனூடாக பெறப்படும் வருமானத்தையே நம்பி அதிலே தங்கி தங்களின் நாளாந்த வாழ்க்கையை நடத்தி வருகின்ற மக்கள் இந்த பயணத் தடையின் மூலமாக இவ் கால்நடைகளுக்குரிய குறிப்பாக மாடுகளுக்குரிய தீவனத்தை பெற முடியாமையால் சிரமத்தையும் பல விதமான கஸ்டங்களையும் எதிர் நோக்குகிறார்கள்.

தீவனக் கடைகள் பூட்டப்பட்டிருப்பதனால் இவர்களுடைய கால்நடைகளுக்குரிய குறிப்பாக மாடுகளுக்குரிய தீவனத்தைப் பெற முடியாதுள்ளது. இதனால் கால்நடை உயிரினங்களுக்கு உரிய உணவை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உரிய தீவனத்தை கால்நடைகளுக்கு வழங்க முடியாமையால் உரிய பலனை பெற முடியாத நிலையில் கால்நடை வளர்ப்பாளர்கள் உள்ளனர். இதனால், அவர்களுக்கு இவ்வளவு காலமும் கிடைத்த வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதன் விளைவாக உரிமையாளர்கள் தங்களுடையதும் தங்களை சார்ந்து வாழ்பவர்களுடைய அடிப்படைத் தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த பயனாளிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் அதனூடாக ஈட்டப்பட்டு வந்த வருமானம் அறவே இல்லாமல் போயுள்ளது.

ஆகவே, தீவன விற்பனையாளர்கள் இதனை பயனாளிகளுக்கு கிடைக்கக் கூடிய வகையில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யலாம் அல்லது மக்கள் அத்தியாவசிய தேவைப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டது போன்று இவ் தீவன நிலையங்களையும் திறந்து பொருட்களை விற்பனை செய்ய உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டால் சாலச்சிறந்ததாக அமையும் - என்றுள்ளது. (ஐ)

# முறையான திட்டங்கள் இல்லாத பயண கட்டுப்பாட்டால் பயனில்லை!

## சபையில் விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 09

கோவிட் தொடர்பான முறையான திட்டங்கள் எதுவும் இல்லாமலே தொழிற்சாலைகள் இயங்குகின்றன. அதனால் பயணக்கட்டுப்பாடு எந்தளவு காலத்துக்கு நடைமுறைபடுத்தினாலும் அதன் பெறுபேற்றை அடைந்துகொள்ள முடியாது. இதனால்தான் தொற்றாளர்கள் நாளுக்குநாள் அதிகரித்து செல்கின்றனர் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், கோவிட் தொற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாக அரசாங்கம் என்ன தெரிவித்தாலும் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு நிலைமை மாறியிருக்கின்றது. அரசாங்கம் பயணக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தி இருக்கும் இந்த காலத்தில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்படுகின்றனர். மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து செல்கின்றது. தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் போதுமான வசதிகள் இல்லை. தொற்றார்களை மத்திய நிலையங்களுக்கு அழைத்துவர வாகன வசதிகள் இல்லை.

மேலும் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளபோதும் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. கட்டுநாயக்க, பியகம வர்த்தக வலயங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் பணி புரிந்து வருகின்றனர். அந்த தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்கு எந்த பாதுகாப்பும் இல்லை. அங்கு ஆயிரக்கணக்கானவர்கள் ஒரே வரிசையில் இருந்து பணிபுரிகின்றனர்.

வேலை முடிவடைந்த பின்னர் அங்குள்ள வாகனத்தில் அவர்கள் தங்குமிடங்களுக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர். தொழில் புரிகின்றவர்களில் அதிகமானவர்கள் சிறிய விடுதிகளில் ஒன்றாகவே இருக்கின்றனர். இதனால்தான் கம்பஹா மாவட்டத்தில் நாளுக்கு நாள் கோவிட் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றனர்.

அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை கருத்தில்கொண்டு தொழிற்சாலைகளை திறக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றது. என்றாலும் இதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ள தவறியிருக்கின்றது- என்றார்.



# கல்வியில் புனைவுகளுக்கு நிதியிடல்

நியந்தினி கதிர்காமர்

இலங்கையின் கல்விமுறை நவீன உலகுக்கு ஒவ் வாத, காலம்கடந்த ஒன்றென அடிக்கடி விமர்சிக்கப்படுகின்றது. ஆனால், இலவசக் கல்விக்கான கேள்வி குறையவில்லை. ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் மாணவர் சேர்க்கை வீதமானது உயர்வாகக் காணப்படுகிறது. எதிர்பார்ப்புக்கு முரணாக, குறைவான தொழில் வாய்ப்பைத் தரக்கூடிய துறைகள் எனக் கூறப்படும் கலைத்துறையில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. அரசாங்கம் கூட, அதிகரித் துச் செல்லும் இந்தத் தேவையை உணர்ந்து அரச பல் கலைக்கழகங்களில் இன்னும் கூடுதலான மாணவர்க ளைச் சேர்த்துக் கொள்வதாக உறுதியளித்துள்ளது.

மாணவர்களுக்கு உயர்கல்வி கற்பதற்கான கதவு களைத் திறந்துவிடுவதென்பது சரியான பாதைக்கான முதற்படியாகத் தோன்றினாலும், அதனுடன் தொடர்புடைய வளங்கள் மற்றும் நிதிகள் என்பனவும் அதிகரித்துச் செல்லாமையால் இவ்வகையான முன்னெடுப்பு உயர்கல்வி நிறுவனங்களில் பெரும் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றது. இதற்கும் மேலாக, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் விஸ்தரிப்பிற்கான அறிவுறுத்தலுக்குப் பல்கலைக்கழக நிர்வாகமோ கல்விப்பீடங் களோ எதிர்ப்பு எதனையும் தெரிவிக்க வில்லை. மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் கழகமானது அண்மையில் முன் னெடுத்த, “அரசாங்கம் உள்வாங்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக் காவிடின் வேலைத் தவிர்ப்பில் ஈடுபடு வோம்,” என்ற நகர்வானது, ஒரு துணிச்ச லான நட வடிக்கையாகவும் ஒரு சிக்கலான யதார்த்தத்தை உணர்த்துவதாகவும் உள்ளது.

### தட்டையான நிதி வளைவு?

தேர்தல் விஞ்ஞாபனங்களில் “இலங்கையின் அபிவிருத்தியில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப் போம்,” என்ற அதியுன்னத வாக்குறுதிகளுக்கு மாறா கவே அரச வரவு-செலவுத்திட்டங்கள் பிரதி பலித்திருக்கின்றன. நன்றியற்ற, எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களில் ஈடுபடும் இளைஞர்களின் இலவசக்கல்விக்காக நாட்டின் வரி செலுத்துவோரின் பணம் வீணாக்கப்படுகின்றது என்ற முறைப்பாடுகளுக்கு மாறாக, கல்விக் கான பாதீடு பரிதாபமாக குறைவான நிலையிலேயே இருக்கின்றது. உருவில் காட்டப்பட்டுள்ளது போல, போருக்குப் பின்னரான தசாப்தத்தில் கல்விக்கான அரசாங்கத்தின் செலவீடானது சராசரியாக மொத்தத் தேசிய உற்பத்தியின் 2% ஆகவே மாறாது நிலைத்திருக்கிறது. இது தெற்காசியச் சராசரியிலும் குறைவானதாகும் (மொ.தே. உ யில் 3%).

வங்காளதேசத்தை விடுத்து, இலங்கையே இப்பிராந் தியத்தில் ஆகக் குறைவான கல்விக்கான ஒதுக்கீட்டை கொண்டுள்ளது. இந்நிலையில், இயக்குதிறன் பற்றிப் பேசும் சந்தை நிபுணர்களையே வெட்கம்கொள்ளச் செய்யுமளவிற்கு எங்கள் இலவசக் கல்வித்துறை இயக்குதிறன்மிக்க வீதத்தில் இயங்குகின்றது. அவர்கள் குறைந்துசெல்லும் வளங்களைக் கொண்டிருந்த போதும் தங்களின் சிறந்த தாங்குதிறனால் வீரியமிக்க சவால்களுக்கும் முகம் கொடுக்கிறார்கள். ஏற்கெனவே தாங்குசக்தியின் எல்லையில் நிற்கும் இலவசகல்வி விரைவில் அறுநிலையை அடையக்கூடும்.

கல்வியுட்பட, சமூகம் சார்ந்த துறைகளில் மறு சீரமைப்புக்கான முதலீடுகளை மேற்கொள்வதில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் தோல்வியுற்றன. போருக்குப் பின்னரான தசாப்தத்தில் ராஜபக்ஷவின் அரசாங்கத்தில், கல்விக்கான நிதிப்பாய்ச்சல் பரிதாப மான முறையில் 2012ஆம் ஆண்டில் சரிவு கண்டது. இது பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேள னத்தை ஒரு பரந்தளவிலான பகிஷ்கரிப்பைச் செய்யத் தூண்டியது. அவர்களின் கோரிக்கை மொத்தத் தேசிய உற்பத்தியில் 6%ஐக் கல்விக்கு வழங்க வேண்டும் என்ப தாகும். கல்விக்கான நிதி ஒதுக்கீடுகளில் எதுவித குறிப் பிடத்தக்க அதிகரிப்புமின்றிப் போராட்டம் முடிந்தது.

2015ஆம் ஆண்டு இச்சவாலை நல்லாட்சி அரசாங் கம் எடுத்துக்கொண்டு தனது தேர்தல் பரப்புரையில், ஐந்து வருட ஆட்சிக் காலத்தில் கல்விக்கான நிதியைப் படிப்படியாக அதிகரிப்பதாக வாக்குறுதியளித்தது. மீண்டும் அவ்வாக்குறுதி குறுகிய ஆயுளையே கொண்டிருந்தது. 2016 இல், 3.4 ஆக அதிகரித்த கல்விக்கான ஒதுக்கீடு மீண்டும் வீழ்ச்சியடைந்தது.

### தொற்றுநோய்க் காலத்தில் வரவு-செலவுத்திட்டம்

தற்போது நாம் பேரிடர் காலமொன்றினுள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அது பகுதியளவில் மட்டுமே கொரொனாத் தொற்றினால் என்று கூறலாம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தேர்வு செய்யப்பட்ட அரசு, வெளிநாட்டுக் கடன்சுமையால் எற்பட்ட பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதோடு, மிகக்குறைவான அரச வருவா யையே செலவீனத்திற்காகக் கொண்டுள்ளது. 2021ஆம் ஆண்டின் கோட்டாபய ராஜபக்ஷ அரசின் வரவு-செலவுத்திட்டமானது பேரிடர் பற்றியோ வேகமாகச் சரிந்து செல்லும் பொருளாதாரத்தை மேம்படுத்துவது பற்றியோ அக்கறைகாட்டியதாக அமையவில்லை.

அரசின் கோவிட்-19இற்குப் பின்னரான கொள்கை வெளிப் படுத்தல்களில் இலவச கல்வியானது அறிவுப்பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கப்பட்டுள்ளது. ஆனால், பொருளாதார நெருக்கடியின்போது அது சாத்தியமற்ற பார்வையாகும். தொழில்சார் கல்வி, தொலைக்கல்வி மற்றும் STEஆசார் துறைகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையி லிருந்து விலகுவோரைத் தடுக்கும்முகமாக இணையவழிக் கல்விக்கான வசதிகள் மற்றும் பாதுகாப்பான வகுப்பறை களுக்கு மாணவரைத் திரும்ப அழைத்தல் போன்ற உடனடிச் சவால்களுக்கான தீர்வுகளைக்கூட 2021ஆம் ஆண்டின் பாதீடு முன்வைக்கவில்லை.

நம்பத்தகாத பாதீட்டின் முன்மொழிவுகள் காரண மாகப் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் இவ்வாண்டில் வயிற்றுப்பட்டியை இறுக்கவேண்டி நிர்ப்பந்திக்கப்படுவர். அரச செலவீனத்தில் திருத்தம் செய்தல் தவிர்க்கமுடியாதது என்பதோடு, கல்வி நிறு வனங்களிடம் இருப்புக்காக நிதியைச் சேகரிக்கும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைக்கும் அறிகுறிகள் தோன்றுகின்றன. பொதுக் கல்வியை நிதிப் பற்றாக்குறை யில் விடுவதனால் அது தனியார் மயமாகும் ஆபத்துள்ளது. இது கல்விப் புலத்தில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

### சமனற்ற பங்கீடு

பொதுக் கல்விக்கான நிதியொதுக்கீடு குறைந்து போதல் என்பது முக்கிய பிரச்னை. மேலும் சொற்ப மான நிதியொதுக்கீட்டில் சமனற்ற பங்கீடானது வேறு பட்ட பாரிய சவால்களை ஏற்படுத்தும். பல மாதங்க ளாகத் தொலைக்கல்வியால் முற்றும் சோர்வடைந்த நிலையில் மாணவர்களும் ஆசிரியர்களும் தொற்றுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் முகம் கொடுக்க தேவை யான வளங்கள் இல்லாமல் பதற்றத்துடன் பாதுகாப் பற்ற பாடசாலைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் திரும்ப நேரிட்டுள்ளது.

தொற்றுக்கு முன்னரான காலத்திலும்கூட, முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்ட இத்துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. பொதுக் கணக்காய்வுச் செயல்குழுவின் (COPA) கூட்ட அறிக்கையின்படி, 2013 இற்கும் 2018இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 200 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மேலும் 200இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 5,000இற்கும் மேலான பாடசாலைகளின் கல்வித் தரம் பற்றிக் கரிசனை கொள்ளப்படுகின்றது. அவை போன்ற கிராமியப் பாட சாலைகளில் ஆரம்பக் கல்வி ஆசிரியர் பற்றாக்குறை, இடப்பற்றாக்குறை, அடிப்படைச் சுகாதார, நீர் வசதிகள் போன்றன முக்கிய பிரச்னைகளாக இனங்காணப் பட்டன. இந்நிலையானது அச்சம் தருவதாயுள்ளது, ஏனெனில் முன்னைய அரசாங்கத்தி னால் நடைமுறைப்படுத்தப்பட்ட “அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” எனும் திட்டமானது இப்பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கும் முகமாகவே முன்னைய அரசாங் கத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

பொதுக் கல்வி முறைமையில் வளப்பங்கீடுகளில் ஏற்றத்தாழ்வானது தொற்றுநோய்க் காலத்தில் அப்பட்டமாகியுள்ளது. சில பாடசாலைகளில் அடிப்படைச் சுகாதார வசதியான கை கழுவுவதற்கான ஓடும் நீர் வசதி யைக்கூட வழங்க முடியாமலுள்ளது. கிராமப்புறங்களில் மிகக் குறைந்த வருமான குடும்பங்களிலுள்ள ஏழை மாணவர்கள் இணையவழிக் கல்வியிலிருந்து விடுபட்டுள்ளதால் இவ்வாண்டு பாடசாலைக்கு வராதும் போகலாம். சமூக நலன் புரி ஆதரவுமின்றி பொருளாதாரப் பின்னடைவைச் சீர்செய்யும் ஊக்குவிப்பு எதுவுமின்றி மேலும் மாணவர்கள் இவ்வழியில் செல்லக் கூடும். போரினால் சிக்குண்ட பிரதே சங்களில் இந்நிலை மிகவும் கடுமை யானது. ஏனெனின் வன் முறையில் சிக்கிய சிறுவர்கள் மற்றும் இளை ஞர்கள் தலைமுறைகளின் கல்விக்கான முதலீடுகள் இன்ன மும் சாத்தியப்படவில்லை.

### மனித மூலதன (human capital) வாதம்

2019இல் உலக வங்கியானது பேராவலுள்ள இலங்கைக்கான மனித மூலதனத்திட்டத்தை முன்மொழிந்தது. கிராமியப் பொருளாதாரத்திலிருந்து நகரப்புற மற்றும் உலகளாவிய போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதிப் பொருளாதாரமாக நாடு மாறும் என்ற அதன் குறைபாடான எடுகோளை அடிப்படையாகக் கொண்டே பொதுக் கல்விமுறைக்கான அதனுடைய திட்டம் அமைந்துள்ளது. கடந்த சில தசாப்தங்களாக உலகளாவிய ரீதியிலும் கூட கற்றலுக்கான முதலீடுகளை வடிவமைப்பதில் மனித மூலதன சிந்தனையே செல்வாக்கு செலுத்தியுள்ளது.

1960களில் சிக்காகோவின் (நவதாராளவாத) பொருளாதார வல்லுனர்களின் விதந்துரையின் பிரகாரம், மனித மூலதன கொள்கையானது நேரியலான தொடர்பை அனுமானிக்கின்றது. அதாவது, கல்விக்கான அதிக முதலீடு கல்விகற்கக்கூடிய வருடங் களை அதிகரிக்கும், இது கூடிய வருமானத்திற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதோடு உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும் என்பதாகும். கல்வி முறைமையின் வெற்றியை வருவாய் வீதம் மற்றும் நாடுகளை மனித மூலதனச் சுட்டி(HCI) மூலம் தரவரிசைப்படுத்தி அளவீடு செய்யும் ஆவேசம் தொடர்ந்தது. உயர்ந்த மனித மூலதனச் சுட்டியை அடைவதற்காக தொழிலாளர்களை உற்பத்தித் திற னுள்ளவர்களாக மாற்றுவதற்குத் தேவையான பாடத்திட்டம், கற்பித்தல் முறைமை, மதிப்பீடு போன்ற கல்வி முறைமைகள் மறுசீரமைக்கப்பட வேண்டியதாயிற்று.

மனித மூலதனமென்பது பல குறைபாடுகளுள்ள எண்ணக்கருவாகும். கல்விகற்ற ஆண்டுகளும் உற்பத்தித் திறனும், உற்பத்தித்திறனும் வருமானமும், உற்பத்தித்திற னும் சம்பாத்தியமும் ஒன்றுடனொன்று சம்பந்தப்பட் டது என்ற கருத்து விமர்சகர்களினால் பல வருடங்களாக பிழையென நிரூபிக்கப்பட்டு வருகின்றது. மாறாக, முறை யான வேதனம் பெறக்கூடிய தொழில்களுக்கான நுழைவு கட்டமைப்புக் காரணிகளான வர்க்கம், இனம், பால், சாதி, என்பவற்றால் தீர்மானிக்கப்படுகின்றது. ஆனால், அவை மனித மூலதனக் கொள்கையில் புறக்கணிக்கப்பட் டுள்ளது. மேலும், இவ்வாறான குறுகிய புரிதல் ஜனநாயகப்பிரஜை போன்ற கல்விக்கான சிறந்த இலட்சியங்களுக்கு இடமளிப்பதில்லை.

இருப்பினும், மனித மூலதனமானது உள்ளூர்க் கொள்கைப் பிரசாரங்களில் பேசுபொருளாயுள்ளது. சிறிலங்கா பொது ஜன பெரமுனவின் அரசியல் விஞ்ஞா பனத்திலிருந்து, புதிய பாராளுமன்றத்தின் அங்குரார்ப் பண வைபவத்தின்போது, வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் கல்வி அதிகாரிகளின் ஜனாதிபதியுடனான கூட்டங்களின்போது மனித மூலதனத்தின் அபிவிருத் தியே மிகப் பெரிய சொத்து என்று வலியுறுத்தப்பட் டது. உலக வங்கியின் கொள்கை நிபந்தனைகளுடன் அரசாங்கத்தின் நோக்குகளும் ஒருங்கிசைந்து செல்கின்றதென்பது தெளிவாக கண்கூடாகும்.

### நிதி ஒதுக்கீட்டுச் சவால்களை எதிர்கொள்ளல்

தற்போதைய கல்விக்கான நிதி ஒதுக்கீட்டின் நெருக்கடியானது கடந்த பல தசாப்தங்களாக பொது முதலீடுகளில் ஏற்பட்ட சிதைவுகளின் விளைவாகும். கொரொனா நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி போன்றவை கொடுத்த அதிர்ச்சியினால் கல்வித்துறையானது மேலும் வலுவிழந்து போயுள்ளது. கல்வியியலாளர்கள் எவ்வாறு நிதிச்சவால்களுக்கு முகங்கொடுக்கப் போகின்றார்கள்? நிதிகளைப் பற்றிய சிந்தனைகள் மற்றும் ஒதுக்கீடுகளில் காணப்படுகின்ற புனைவுகளையும் கல்விக்கான வரவு-செலவுத்திட் டத்தை மேலிருந்து கீழான அணுகுமுறையில் நடை முறைப்படுத்துவதையும் அவசியமாக எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ■



> ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய ஈழத் தமிழ் இளைஞர்கள் 18பேர் கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தனர். 20 பேர் விமானத்தில் ஏற்றப்பட்டிருந்தாலும் விமானம் புறப்படுவதற்கு முன்னர் இரு தமிழ் இளைஞர்கள் அந்த நாட்டு வழக்கறிஞர் ஒருவரின் கடுமையான போராட்டத்தினால் நாடுகடத்தப்படவில்லை.

# அடைக்கலம் கோரும் ஈழத் தமிழர்களை திருப்பி அனுப்ப அவசரப்படும் ஜேர்மனி

இலங்கை தொடர்பான விவகாரத்தைக் கையாள்வதற்கான ஜெனீவா மனித உரிமைச் சபையின் கருக்குழு நாடுகள் பட்டியலில் பிரதான அங்கம் வகிக்கும் ஜேர்மன் அரசு இலங்கைக்குச் சாதகமானதொரு போக்கையே பின்பற்றி வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்திலும் ஜேர்மனி அங்கம் வகிக்கின்றது. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான அதாவது நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற போது ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகித்திருந்த பிரித்தானியா, ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்துச் சூழ்ச்சிகளையும் அன்று வகுத்திருந்தது. தற்போது ஒன்றியத்தில் இருந்து விலகிய நிலையில், ஜேர்மன் அரசு மூலமாக ஈழத் தமிழர் அரசியல் விடுதலைக்கு எதிரான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்காக இரண்டு காரணங்களைச் சுட்டிக்காட்டலாம். ஒன்று கடந்த மார்ச் மாதம் ஜெனீவா மனித உரிமைச் சபை அமர்வு இடம்பெற்றிருந்த வேளை, விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் சிலருக்கு எதிராக ஜேர்மன் அரசு மேற்கொண்டு வரும் சில நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபை வழங்க வேண்டிய ஒத்துழைப்புத் தொடர்பாக ஜேர்மன் பிரதிநிதி ஹன்ஸ் பீற்றர் யூகல் கேள்வி எழுப்பியிருந்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி மனித உரிமைச் சபையின் 46 ஆவது அமர்வில் உயர் ஸ்தானிகர் மிச்சல் பச்லெற் அம்மையார் இலங்கை குறித்த அறிக்கையை வாசித்து முடித்த பின்னர் இடம்பெற்ற விவாதத்தில் ஜேர்மன் அரசின் பிரதிநிதி இவ்வாறு கேள்வி எழுப்பியிருந்தார்.

ஆனால், முள்ளிவாய்க்கால் மற்றும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த இலங்கை இராணுவமும் பொலிஸாரும் விதித்த தடைகள், இடையூறுகள், மற்றும் வடக்கு, கிழக்கில் தொடர்ந்தும் நடவடிக்கைகளில் இராணுவம் தலையிடுதல் உள்ளிட்ட ஈழத் தமிழர்களுக்கு எதிரான நெருக்குவாரங்கள் பற்றி எதுவுமே அந்த ஜேர்மன் பிரதிநிதி பேசியிருக்கவில்லை. அதேவேளை ஜெனீவா பிரேரணைக்கு ஆதரவாகவும் ஜேர்மன் அரசு வாக்களித்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேதான் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை தொடர்பாகத் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுக் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஜேர்மன் அரச நீதிமன்றத்தினால் ஆறு ஆண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது, ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய ஈழத் தமிழ் இளைஞர்கள் 18பேர் கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தனர். 20 பேர் விமானத்தில் ஏற்றப்பட்டிருந்தாலும் விமானம் புறப்படுவதற்கு முன்னர் இரு தமிழ் இளைஞர்கள் அந்த நாட்டு வழக்கறிஞர் ஒருவரின் கடுமையான போராட்டத்தினால் நாடுகடத்தப்படவில்லை.

அத்துடன் இன்று புதன்கிழமை மேலும் 20 தமிழ் இளைஞர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளனர். சுமார் ஆறு, ஏழு வருடங்களுக்கும் அதிகமாக ஜேர்மனியில் வாழ்ந்த இளைஞர்களே நாடு கடத்தப்படவுள்ளனர். இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாமில் எத்தனை இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற விபரங்களைப் பெறமுடியாதுள்ளதாக மனித உரிமைச் செயல்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆகவே, பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறிய பின்னரான சூழலில், இலங்கை அரசுக்குச் சாதகமாகவும் ஈழத்தமிழர்களுக்கு எதிராகவும் நகர்வுகளை மேற்கொள்ள ஜேர்மன் தற்போது தூண்டிவிடப்பட்டிருக்கிறது. அல்லது இலங்கையுடன் ஜேர்மன் அரசு பேரம் பேசியிருக்க வேண்டும்.

2002 ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து பிரித்தானிய அரசு, ஐரோப்பிய ஒன்றியத்தின் மூலம் இலங்கை விவகாரத்தைக் கையாளும் முக்கிய நாடாக இருந்தபோதுதான் புலிகளுக்கு எதிரான பயணத் தடை விதிக்கப்பட்டது. அதுவும் சர்வதேச நாடுகளில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே பயணத் தடை விதிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் விதித்த இந்தப் பயணத்தடை தவறான முடிவென அப்போது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக இருந்த உல்கென்றிஸ் கண்டித்திருந்தார். சமபலத்தோடு இரு தரப்பும் பேச்சுக்கள் நடத்திக் கொண்டிருக்கும் நிலையில், மனித உரிமைகள் மீறல் விவகாரத்தில் ஒரு தரப்பை மாத்திரம் தண்டிக்க முடியாது எனவும் இது இருதரப்புப் பேச்சுவார்த்தை தொடருவதற்கான தடைகளை அது உருவாக்குமெனவும் உல்கென்றிஸ் சுட்டிக்காட் டியிருந்தார்.

**அ.நிக்சன்**

ஐரோப்பிய ஒன்றியத்தில் ஸ்கண்டிநேவிய நாடுகளான பின்லாந்து, சுவீடன், டென்மார்க் போன்ற நாடுகள் அங்கம் வகித்திருந்தால், நோர்வே தலைமையிலான போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் இந்த மூன்று நாடுகளும் வெளியேற வேண்டுமென அன்று விடுதலைப் புலிகள் நோர்வே அரசுக்குக் கடிதம் எழுதியிருந்தனர்.

இந்த மூன்று நாடுகளும் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியம் புலிகளுக்குப் பயணத் தடை விதித்தால், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் இந்த மூன்று நாடுகளின் பிரதிநிதிகளும் நேர்மையாகச் செயல்படுவார்களென எதிர்பார்க்க முடியாது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட பின்னர் செப்ரெம்பர் மாதம் இந்தப் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது. லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டதாலேயே புலிகள் மீதான பயணத் தடைக்குக் காரணமென அன்று கொழும்பில் சிங்கள ஆங்கில ஊடகங்கள் விபரித்திருந்தன. ஆனால், பயணத் தடைக்கு அது காரணமல்ல.

1999 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து பல சர்வதேச உயர் பதவிகளை வகித்திருந்த இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பிரித்தானியப் பிரஜையான நிரஞ்சன் ஜோசப் டி சில்வா தேவா ஆதித்தியா என்பவரே காரணமாக இருந்தார். ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு உறுப்பினராகவும் இந்திய அரசு மற்றும் ஆசியான் நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்துவதற்கான தூதுக்குழு உறுப்பினராகவும் இவர் பதவி வகித்திருந்தார். ஆகவே, நிரஞ்சன் தேவாவின் சர்வதேசத் தொடர்புள்ள சந்தர்ப்பங்களை இலங்கை அரசு அன்று பயன்படுத்தியிருந்தது. பயணத் தடை விதிப்பதற்காக கதிர்காமரின் கொலையைச் சாதகமாக்கியிருக்கிறார்கள்.

ஆகவே, ஈழத்தமிழர் விவகாரத்தில் இலங்கை இந்திய அரசுகளும் அதற்கு ஆதரவான சர்வதேசத் தொடர்பாளர்களும் கூறுகின்ற நேர்மையற்ற தகவல்களை மாத்திரம் நம்பிக் கொண்டு செயற்பாடுகளை அன்று முன்னெடுத்த பிரித்தானிய, மறுபுறத்தில் அங்கு வாழும் புலம்பெயர் தமிழர்களுக்கு உசுப்பேத்தித் தம் மீதான போலியான நம்பிக்கையைத் தக்கவைத்துமிருந்தது.

சமாதானப் பேச்சு காலத்தில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா, ஜப்பான். நோர்வே ஆகிய நாடுகள் இணைத்தலைமை நாடுகளாகச் செயற்பட்டிருந்தன. ஆனாலும் பிரித்தானிய அரசுதான் ஈழத்தமிழர்களுக்கு எதிரான யோசனைகள், தீர்மானங்கள் அனைத்துக்குமே காரணமாக இருந்தது என்ற குற்றச்சாட்டுக்களும் உண்டு. 1997 ஆம் ஆண்டு பிரதமராகப் பதவி வகித்திருந்த ரொனி பிளேயர் காலத்தில் இருந்தே பிரித்தானியத் தொழில்கட்சி ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு போன்ற தொரு மாயையைக் காண்பித்திருந்தது. ஆரம்பத்தில் இருந்தே இடம்பெற்ற தமிழ் இன அழிப்புக்களை பிரித்தானியா கண்டுகொள்ளாதது போல் செயல்பட்டுமிருந்தது.

அத்துடன் 2005 ஆம் ஆண்டு விதிக்கப்பட்டிருந்த பயணத் தடைவரை இலங்கை விவகாரத்தில் பிரித்தானியாவைப் பிரதானமாகக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் புலிகளுக்கு எதிரான செயல்பாடுகளை மேற்கொண்டதாலேயே 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இன அழிப்புச் செயற்பாடுகளை இலங்கை அரசு துணிவோடு முன்னெடுத்திருந்ததென்றும் கூறலாம். அதாவது பயணத் தடையை அடுத்து 2006 ஆம் ஆண்டு புலிகளுக்கு எதிராக முற்று முழுதாக விதிக்கப்பட்ட தடையே அந்தத் துணிவுக்குக் காரணமெனலாம்.

புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை என்பது அன்று புவிசார் அரசியலை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது. ஆகவே அந்தச் செயல்பாட்டின் நீட்சியைத் தற்போது ஜேர்மன் அரசு மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

கருக்குழு நாடுகளில் அங்கம் வகித்திருந்த பிரித்தானியாவைச் சில புலம்பெயர் அமைப்புகள் நம்புகின்றன. அவ்வாறே ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு போன்ற தொரு தோற்றத்தை வெளிப்படுத்தி வரும் ஜேர்மன் அரசையும் சில புலம்பெயர் அமைப்புகள் நேசிக்கின்றன.

ஆனால், 1994 ஆம் ஆண்டில் இருந்து ஈழத்தமிழர்களுக்கு எதிரான செயல்பாடுகளை சர்வதேச அரங்கில் முன்னெடுத்திருந்த லக்ஷ்மன் கதிர்காமரின் அரசியலையே, ஜேர்மன் 2019 ஆம் ஆண்டில் இருந்து முன்னெடுக்கின்றதா என்ற சந்தேகங்கள் எழுகின்றன.

இவ்வாறான சந்தேகங்கள். கேள்விகளுக்கு மத்தியில், ஜேர்மனியில் இருந்து மனித உரிமை ஆணைக் குழுவின் பிரதிநிதிகள் சிலர் மிகவும் இரகசியமாக கொழும்புக்கும் வடக்குக் கிழக்குத் தாயகப் பிரதேசங்களுக்கும் வந்து சென்றிருக்கின்றனர். பலரைச் சந்தித்து உரையாடியதோடு, தமிழ் இளைஞர்கள் ஜேர்மனியில் இருந்து கடந்த மார்ச் மாதம் கடத்தப்பட்டமை தொடர்பாகவும் தற்போதைய அரசியல் சூழல் குறித்தும் கேட்டு அறிந்திருக்கின்றனர். ஆனால் இந்தச் சந்திப்பின் பின்னரும்கூட இன்று 20 தமிழ் இளைஞர்கள் இலங்கைக்குக் கடத்தப்படவுள்ளனர்.

கருக்குழு நாடுகள் பட்டியலில் இடம்பெறும் ஜேர்மன், ஈழத் தமிழர்களுக்கு எதிராக மாத்திரம் முன்னெடுக்கும் செயல்பாடுகள் சந்தேகங்களையே உருவாக்கியிருக்கின்றன. ஆகவே முதலில் ஜேர்மன் அரசு இந்தச் சந்தேகங்களை நீக்க வேண்டும். ஏனெனில், பிரித்தானியா வெளியேறியதால் இலங்கை விவகாரத்தை ஐரோப்பிய ஒன்றியத்தில் கையாள ஆரம்பித்துள்ள ஜேர்மனி, தனியே இலங்கை அரசைப் பாதுகாப்பதற்கான அல்லது நியாயப்படுத்துவதற்கான தளபதியாக மாத்திரம் இயங்க முடியாது. புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் சூம் சந்திப்புக்களை மாத்திரம் நடத்திக் கொண்டிருக்காமல், தற்போதைய புவிசார் அரசியலில் காணப்படும் அம்சங்களையும் சர்வதேச அரசுகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு நலன்களுக்கு ஊடாக எப்படி நகர்ந்து காரியத்தைச் சாதிக்கலாமென்பதையிட்டும் பரிசீலித்தல் நன்று!

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 5 வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

### இல - 4 வினாத்தாள் - I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 1 | 21. 2 | 31. 1 |
| 2. 1 | 12. 3 | 22. 1 | 32. 3 |
| 3. 2 | 13. 1 | 23. 2 | 33. 2 |
| 4. 3 | 14. 2 | 24. 3 | 34. 3 |
| 5. 2 | 15. 3 | 25. 3 | 35. 2 |
| 6. 1 | 16. 3 | 26. 1 | 36. 2 |
| 7. 2 | 17. 3 | 27. 3 | 37. 3 |
| 8. 2 | 18. 2 | 28. 1 | 38. 2 |
| 9. 1 | 19. 3 | 29. 3 | 39. 3 |
| 10. 3 | 20. 1 | 30. 1 | 40. 1 |

### இல - 4 வினாத்தாள் - II விடைகள்

01) 1. செல்பேசி
2. அவசியமற்ற அழைப்புக்களை
3. இன்பம்
4. உலகம்
5. ஏற்றிடுவாய்
6. கை (6 புள்ளி)

02) 1. நல்ல புத்தகங்களை வாசிப்பதால் சிறந்த அறிவுரை கிடைக்கும்
2. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து (2 புள்ளி)

03) கம்பி (1 புள்ளி)

04) போத்து (1 புள்ளி)

05) பிள்ளை (1 புள்ளி)

06) 1. ஒளி
2. கரை (4 புள்ளி)

07) 1. இசைக்கருவிகள்
2. பஞ்சபூதம் (4 புள்ளி)

08) 1. யன்னல்
2. நிழல்பிரதி
3. வேலி (3 புள்ளி)

09) 1. News
2. Dance
3. Butterfly (3 புள்ளி)


10) 1. விசி அட்டாய்
2. மே மில கீயத? (4 புள்ளி)

11) 1. கொஞ்சம் பசிக்கிறது
2. நாளை குளிக்கட்டுமா (4 புள்ளி)

12) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளி)

13) 1. பத்தாயிரம்
2.50
3. 1. 1/8
2. 7/8

4.



5. 1. 3/10
2. 0.7

6. 1. 4/5
2. 8/15

7. 8kg 300g

8. 4l 300ml

9. 42 cm

10. 9845

11. 60

12. 1820

13. சரியாக காட்டியிருப்பின் புள்ளி வழங்குக.

14. 1250.00 / 400.00 / 1800.00

15. 28 ரூபாய் (31 புள்ளி)

16.


| | | |
|---|---|---|
| 1. 1 | 11. 3 | 21. 3 |
| 2. 1 | 12. 2 | 22. 3 |
| 3. 1 | 13. 2 | 23. 1 |
| 4. 1 | 14. 4 | 24. 3 |
| 5. 3 | 15. 3 | 25. 1 |
| 6. 4 | 16. 1 | 26. 3 |
| 7. 2 | 17. 1 | 27. 3 |
| 8. 3 | 18. 3 | 28. 3 |
| 9. 3 | 19. 1 | 29. 2 |
| 10. 4 | 20. 2 | 30. 1 |

(30 புள்ளி)


* தரப்படும் அறிவுறுத்தலுக்கேற்ப 1 -40 தரப்பட்ட வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.

* 1, 2 ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

1.




2.




1. 2. 3.

3. கீழே தரப்படுட்டுள்ள உருவில் ஒரு உரு ஏனைய உருக்களில் இருந்து வேறுபட்டுள்ளது. அவ் வேறுபட்ட உருவைத் தெரிக.



1. 2. 3.

4. வரையத் தொடங்கிய பின் கையை எடுக்காமலும் வரைந்த கோட்டின் வழியே மீண்டும் வரையாமலும் வரையக் கூடிய உரு அல்லாதது.



1. 2. 3.

5. தடயம் கூறி விளையாடும் விளையாட்டின் ஒரு பகுதி தரப்படுகிறது.
உயிருள்ளதா? ஆம், உலகில் எங்கும் கிடைக்குமா? ஆம், விலை கொடுத்து வாங்குவார்களா? ஆம், ஊர்ந்து செல்லுமா? ஆம், அவ்வாறெனில் அது
1. நத்தை 2. கிளிஞ்சல் 3. கடற்குதிரை

6. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க.
1. களானாலும் குளித்துக் குடி 2. கழானாலும் குழித்துக் குடி
3. கழானாலும் குளித்துக் குடி

* தரம் 05 வகுப்பறையில் நடைபெற்ற பாடங்கள் தொடர்பான நேரசூசி ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு 07, 08 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|
| தமிழ் | கணிதம் | கணிதம் | ஆங்கிலம் | சிங்களம் |
| கணிதம் | சுற்றாடல் | தமிழ் | தமிழ் | கணிதம் |
| சுற்றாடல் | சிங்களம் | சுற்றாடல் | சிங்களம் | ஆங்கிலம் |

7. அதிக தடவைகள் நடைபெற்ற பாடம் எது?
1. தமிழ் 2. கணிதம் 3. சிங்களம்



# கிளிநொச்சியில் மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த விசேட பொலிஸ் களத்தில்

கிளிநொச்சி, ஜூன் 09

கிளிநொச்சி மாவட்டத்தில் பயணக்கட்டுப்பாடு அமுலில் இருந்தும் படிப்படியாக மக்கள் நடமாட்டம் அதிகரித்து வருவதால் அதனைக் கட்டுப்படுத்த விசேட பொலிஸ் நடமாடும் பிரிவு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இங்கு மக்கள் நடமாட்டம் அதிகரித்து வரும் நிலையில், குறித்த மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரும் படையினரும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தநிலையில், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் நடமாடும் பொலிஸ் பிரிவு திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருவதுடன், அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்து பொருத்தமற்ற காரணங்களுடன் நடமாடும் மக்களை எச்சரித்து திருப்பி அனுப்பியுள்ளனர்.

இதேவேளை, ஏ - 9 வீதியுடன் இணையும் அனைத்து இணைப்பு வீதிகளிலும் படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், இரணைமடுச் சந்தி, டிப்போ சந்தி மற்றும் கரடிப்போக்குச் சந்தி, பரந்தன் உள்ளிட்ட பகுதிகளில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு மக்களின் தேவையற்ற நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு வருவதுடன், சோதனைகளும் இடம்பெற்று வருகின்றன. (இ)

# 2022இல் நாமல் பிரதமரா? உறுதிப்படுத்தாத தகவல்

## அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய பதில்

**கொழும்பு, ஜூன் 09**



**அமைச்சர் நாமல் ராஜபக்ச 2022 ஆம் ஆண்டில் பிரதமராகப் பதவியேற்பார் என்பது உறுதிப்படுத்தாத தகவல் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

**அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

அமைச்சர் நாமல் ராஜபக்ச 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் பிரதமராகப் பதவியேற்பார் என்று பிரபல ஜோதிடர் விஜித ரோஹன விஜேமுனி கணித்துக் கூறியுள்ளார்.

இந்நிலையில், "அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சுறுசுறுப்பாகப் பல்வேறு வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றார். அவர் 2022ஆம் ஆண்டில் பிரதமராகப் பதவியேற்கப் போகின்றாரா?" என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

"இது அரசியல் ரீதியான சந்தேகங்களை ஏற்படுத்தும் தகவலாகும். இதனை யார் வெளியிட்டார் என்பது தெரிந்திருந்தாலும், நான் இங்கு பெயர் குறிப்பிட விரும்பவில்லை.

இலங்கையில் மாத்திரமன்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் அரசியல் ரீதியான சந்தேகங்கள் பரப்பப்படுகின்றன.

இதுபோன்ற கருத்துக்களை அரசு பாரதூரமாக எடுப்பதில்லை. பொறுப்புள்ள ஊடகவியலாளர்கள் இதனை ஒரு பெரும் சிக்கலாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கின்றேன்" என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய பதிலளித்தார். (இ)

# ரணிலுடன் எவருமே இணையமாட்டார்கள்

**சஜித் அணி அறிவிப்பு**

கொழும்பு, ஜூன் 09

சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவுள்ளனர் என வெளியாகும் தகவலை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

சஜித் அணியில் உள்ள சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட குழுவினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளனர் எனவும், பாராளுமன்றம் வரவுள்ள ரணிலை எதிர்க்கட்சித் தலைவராக்குவதற்கு நகர்வை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையிலேயே மேற்படி தகவலை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது. (இ)

# சமூக வலைதளங்களைக் கண்காணிப்பதால் நேர்மையான ஊடகர்களுக்கு பாதிப்பு இல்லை

## அமைச்சர் கெஹலிய கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 09

இலங்கையில் போலிச் செய்திகளை வெளியிடும் சமூகவலைதளங்களைக் கண்காணிக்கும் தீர்மானம், நேர்மையாகச் செயல்படும் ஊடகவியலாளர்களைப் எந்த வகையிலும் பாதிக்காது என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று தெரிவித்தார்.

சமூக வலைதளங்களைக் கண்காணிப்பதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் உரிமையாளர்கள் யார் என்று உறுதிப்படுத்தப்படாத மற்றும் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில் 17 வீதமான சமூக வலைதளங்கள் இயங்குவது கண்டறியப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சமூக வலைதளங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக மூன்று வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

போலிச் செய்திகளை வெளியிடும் சமூக வலைத்தளக் கணக்குகள் நேர்மையாகச் செயல்படும் ஊடகவியலாளர்களைப் பாதிக்கின்றது எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# சமுதித்தவுக்கு கொலை அச்சுறுத்தல்: பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு!

கொழும்பு, ஜூன் 09

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்து ஊடகவியலாளர் சமுதித்த சமர விக்கிரம, பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டுள் ளார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரட்ணவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ள ஊடகவிய லாளர் சமுதித்த சமரவிக்கிரம, தனக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் குறித்து விசாரணை நடத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.



பயணக் கட்டுப்பாட்டுக்கு மத்தியில் கொழும்பு ஐந்து நட்சத்திரக் ஹோட்டலில் இடம்பெற்ற பிறந்தநாள் நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்தவர்கள் தொடர்பாகத் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கேள்விகளை எழுப்பியிருந்த நிலையிலேயே தனக்கு இவ்வாறான உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு இனந்தெரியாத நபர்களிடமிருந்து தொலைபேசி அழைப்புகள் வருகின்றன எனவும், தனது கேள்விகளால் சிலர் தனிப்பட்ட ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என வும், ஆனால் ஊடகவியலாளர் என்ற ரீதியில் தான் தனது கடமையையே செய்தேன் எனவும் சமுதித்த அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ)

# முன்னணி ஹோட்டல்களில் மது விற்பனைக்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 09

இலங்கையில் பயணக் கட்டுப்பாடுகளின்போது சுற்றுலாப் பயணிகள் தங்கியிருக்கும் முன்னணி ஹோட்டல்களில் மதுபான விற்பனையை மேற்கொள்ள மதுவரித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தக் ஹோட்டல்களில் மது விற்பனைக்கு அனுமதியை வழங்குமாறு மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர்களுக்கு மதுவரி ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சுகாதார மற்றும் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப தமது மது விற்பனை உரிமங்கள், அனுமதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தங்களது அருகிலுள்ள உரிமம் பெற்ற மொத்த விநியோகஸ்தர்களிடமிருந்து மதுபானங்களைப் பெறுவதற்கு முன்னணி ஹோட்டல்களுக்கு மதுவரி திணைக்களத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாடுபூராகவும் மற்றைய அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மறு அறிவித்தல் வரையில் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தகவல் தொழில்நுட்ப சங்கத்தின் தலைவர் சி.ஐ.டியினரால் கைது!

## போலிச் செய்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டில்

கொழும்பு, ஜூன் 09

சமூக வலைதளங்களில் போலிச் செய்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டில் இலங்கை தக வல் தொழில்நுட்ப சங்கத்தின் தலைவர் ரஜீவ் யசிறு மெதிவ், சி.ஐ.டியினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகம், வெளி விவகார அமைச்சு உள்ளிட்ட அரச நிறுவனங்களின் இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று சில தினங்களுக்கு முன்னர் சந்தேகநபரின் பெயரில் இணையத்தளங்களிலும், சமூக வலைதளங்களிலும் அறிக்கை யொன்று வெளியிடப்பட்டிருந்தது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் கூறப் பட்டதைப் போன்று அரச இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல்கள் எதுவும் நடத்தப்பட்டிருக்கவில்லை என்று பொலிஸார் கூறியுள்ளனர். இதன்படி போலிச் செய்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டில் அவரைக் கைதுசெய்துள்ளதா கப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமூக வலைதளங்கள் மற்றும் இணையத்தளங்களில் வெளியாகும் போலிச் செய்திகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக சி.ஐ.டி. அதிகாரிகளை உள்ள டக்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)



# இனவெறியால் திட்டமிட்ட சதி: முஸ்லிம் குடும்பம் படுகொலை!

## கனடாவில் ஞாயிறன்று சம்பவம்

றொறன்ரோ, ஜூன் 09

கனடாவில் நால்வர் கொண்ட முஸ்லிம் குடும்பம் ஒன்றை வாகனம் ஒன்றால் மோதி கொல்லப்பட்டனர். இது முற்கூட்டியே திட்டமிட்டு நடத்தப்பட்ட படுகொலை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் றொறன்ரோவுக்கு தென்மேற்காக 200 கிலோமீற்றர் தொலைவிலுள்ள லண்டன் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த படுகொலை சம்பவத்தில் 74 வயதான பெண், 44 வயதான மற்றொரு பெண், 46 வயதான ஆண், மற்றும் 15 வயதான சிறுமி ஆகியோர் கொல்லப்பட்டனர். 9 வயது சிறுவன் மட்டும் காயங்களுடன் தப்பித்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தப் படுகொலை தொடர்பாக 20 வயதான நதானியேல் வெல்ட்மேன் என்ற கனடிய இளைஞரை பொலிஸார் திங்கட்கிழமை கைது செய்தனர். அவர் மீது கொலை - கொலை முயற்சி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாளை வியாழக்கிழமை அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

2017ஆம் ஆண்டு கியூபெக் மசூதியில் நடந்த தாக்குதலுக்குப் பிறகு கனடாவில் நடந்திருக்கும் இன ரீதியான மிக மோசமான தாக்குதலாக இது அமைந்துள்ளது. முஸ்லிம்கள் என்பதற்காகவே அவர்கள் தாக்கப்பட்டனர் என்று லண்டன் பொலிஸ் துப்பறியும் கண்காணிப்பாளர் போல் வெயிட் தெரிவித்துள்ளார்.

20 வயதான நதானியேல் வெல்ட்மேன் ஞாயிற்றுக்கிழமை தனது வாகனத்தினால் குடும்பத்தின் ஐந்து உறுப்பினர்களையும் மோதினார். பின்னர் அதிவேகமாக அவர் வாகனத்தை ஓட்டிச் சென்றாரெனவும் சாட்சிகளை மேற்கோள் காட்டி பொலிஸார் தெரிவித்தனர். இது முன்கூட்டியே திட்டமிட்டு செய்யப்பட்ட சதி. இன வெறுப்பால் இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன என்பதற்கான சான்றுகள் உள்ளன என போல் வெயிட் செய்தியாளர்களிடம் கூறினார். பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் இஸ்லாமிய நம்பிக்கையின் காரணமாக குறிவைக்கப்பட்டதாக நாங்கள் நம்புகிறோம் என்று வெயிட் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட குடும்பம் சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தானில் இருந்து குடியேறியதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (ஐ)

# தடுப்பூசி செலுத்தாமல் தளர்வு! ஆபத்தில்தான் முடிவடையும்!!

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

ஜெனிவா, ஜூன் 09

கொரோனாவுக்கான தடுப்பூசிகளை செலுத்தாமல் தளர்வுகளை அறிவித்தால் ஆபத்தில்தான் முடியும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் தலைவர் கூறுகையில், “நாங்கள் தொடர்ந்து கொரோனா பரவலைக் கண்காணித்து வருகிறோம். இன்னும் பல




நாடுகள் ஆபத்தில்தான் உள்ளன. கொரோனா தடுப்பூசிகளை முழுமையாகச் செலுத்தாமல் தளர்வுகளை நடைமுறைப்படுத்துவது ஆபத்தில்தான் முடியும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் ஒவ்வொரு நாடும் தங்கள் மக்கள்தொகையில் 10 வீதமான மக்களுக்கு கொரோனா தடுப்பூசிகளை செலுத்த வேண்டும். வருட இறுதியில் இந்த எண்ணிக்கை 30 வீதமாக இருக்க வேண்டும்” என்று கூறியுள்ளார். (ஐ)

# கொரோனா வைரஸ் விவகாரத்தில் சீனாவை கட்டாயப்படுத்த முடியாது!

## உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது

ஜெனிவா, ஜூன் 09

கொரோனா தோற்றம் குறித்த கூடுதல் தரவுகளை வெளியிட சீனாவை கட்டாயப்படுத்த முடியாது என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொரோனா அவசர கால திட்டத்தின் தலைவர் மைக் ரியான் தெரிவித்துள்ளார்.

மாநாடு ஒன்றில் உரையாற்றிய அவர், “இது தொடர்பாக யாரையும் கட்டாயப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு அதிகாரம் இல்லை” என தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் “அடுத்த



நிலைக்கு” எங்கு தோன் றியது என்பதை அறிந்து கொள்ள தேவையான ஆய்வுகளை உலக சுகாதார ஸ்தாபனம் முன்மொழி கிறது - என்றார்.

கொரோனா வைரஸின் தோற்றம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. வுஹான் ஆய்வகமே கொரோனா தொற்று வெடித்ததற்கு காரணம் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

ஆனால், இதனை சீனா தொடர்ந்து மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாகிஸ்தான் ரயில் விபத்து: உயிரிழப்பு 63ஆக உயர்வு!

இஸ்லாமாபாத், ஜூன் 09

பாகிஸ்தானில் அதிவிரைவு ரயில்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 63ஆக உயர்ந்துள்ளது.

ராவல்பிண்டி நகரில் இருந்து கராச்சி நோக்கி சென்ற ரயிலும், கராச்சியில் இருந்து சர்கோதா நகரை நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலும் நேற்று முன்தினம் அதிகாலை நேருக்கு நேர் மோதின.

இந்த விபத்தில் 36 பேர் உயிரிழந்தனர். 50இற்கும் மேறபட்டவர்கள் ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையில், இந்த விபத்தில் காயமடைந்த சிலர் உயிரிழந்தனர். இதே போன்று தடம்புரண்ட ரயில்பெட்டிகளின்கீழே சில உடல்களும்கண்டெடுக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 63ஆக உயர்ந்துள்ளது. இதேவேளை, 100இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# ஐ.நா. பொது சபை தலைவரானார் மாலைதீவு வெளிவிவகார அமைச்சர்!

நியூயோர்க், ஜூன் 09

மாலைதீவின் வெளிவிவகார அமைச்சர் அப்துலா சாஹித், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அப்துலா சாஹித் 2021 - 2022 காலப்பகுதிக்கு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவராக செயல்படுவார்.

நேற்று முன்தினம் ஐ.நா பொதுசபையில் நடந்த வாக்கெடுப்பில் அந்த அமைப்பின் 76



ஆவது தலைவராக அப்துல்லா ஷாஹித் தெரிவு செய்யப்பட்டார்.

அளிக்கப்பட்ட 191 வாக்குகளில் அப்துல்லா ஷாஹித் 143 வாக்குகளையும், ஆப்கானிஸ்தானின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் சல்மாய் ரசோல் 48 வாக்குகளையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாலைதீவை சேர்ந்த ஒருவர், இப்பதவிக்கு தெரிவாகியிருப்பது, இதுவே முதல்முறையாகும். (ஐ)

# பண மோசடி: ‘மகாத்மா’ காந்தியின் கொள்ளுபேர்த்திக்கு 7 வருட சிறை!

ஜோகன்னஸ்பேர்க், ஜூன் 09

பண மோசடி வழக்கில் ‘மகாத்மா’ காந்தியின் கொள்ளுப்பேத்திக்கு தென்னாபிரிக்க நீதிமன்றம் 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளது.

இந்தியாவின் தேச தந்தை என்று போற்றப்படும் காந்தியின் இரண்டாவது மகனான மணிலால் காந்தியின் மகள் இலா காந்தி. இவரின் மகளான ஆஷிஷ் லதா ராம்கோபின் (வயது 56) என்பவருக்கே இவ்வாறு சிறை



தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சணல் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தனக்கு அனுமதி உள்ளது என்றும் இதற்கான வரியை செலுத்த தன்னிடம் பணம் இல்லை எனவும்கூறி மகராஜ் என்ற தொழிலதிபரிடம் ஆவணங்களை காட்டியுள்ளார். அத்துடன், கிடைக்கும் இலாபத்தை பகிர்ந்து கொள்ளலாம் என்றுகூறி அவரிடம் சுமார் 65 இலட்சம் ராண்ட்கள் - நம் நாட்டு மதிப்பில் 9 கோடியே 40 இலட்சம் ரூபாயை 2015ஆம் ஆண்டு கடனாகப் பெற்றுள்ளார்.

ஆனால், பின்னர் அந்த ஆவணங்கள் போலியானவை என்றும் ஆஷிஷ் லதா தம்மை ஏமாற்றி விட்டார் என்று டர்பன் நீதிமன்றில் மகராஜ் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. விசாரணை முடிவில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஆஷிஷ் லதாவுக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு



# ரி - 20 உலகக்கிண்ண தொடர் இலங்கையில் நடத்தப் பேச்சு!




கொழும்பு, ஜூன் 09

இருபது - 20 உலகக்கிண்ணத்தை இந்தியாவுக்குப் பதிலாக இலங்கையில் நடத்துவதற்காக பேச்சு நடத்தப் படுகின்றது. இந்தியா - இலங்கை கிரிக்கெட் சபைகளே இந்தப் பேச்சில் ஈடுபடுகின் றன.

கொரோனா தொற்று பரவல் காரணமாக இந்தியாவில் உலகக் கிண்ணத் தொடரை நடத்துவது சிக்கலாகியுள்ளது. இதனால், உலகக் கிண்ணத் தொடரை ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் சபை முதலில் ஆலோசித்தது.

ஆனால், இடைநிறுத்தப்பட்ட ஐ.பி.எல். தொடரை ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேசமயம், மற்றைய தொடர்களால் ஐ.பி.எல். தொடரின் போட்டி அட்டவணையில் சிறிது மாற்றம் ஏற்படும் என்று கூறப்படுகின்றது. அவ்வாறு மாற்றம் ஏற்படும்பட்சத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸால் உலகக்கிண்ணப் போட்டித் தொடருக்கு 15 நாட்களுக்கு முன்னதாக மைதானங்களை ஐ.சி.சியிடம் வழங்க முடியாது.

எனவே, மாற்றுவழியாக இலங்கையில் உலகக் கிண்ணத் தொடரை நடத்துவது குறித்து ஆலோசிக்கப் படுகின்றது. இதையடுத்து இந்திய கிரிக்கெட் சபையும் இலங்கை கிரிக்கெட் சபையும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்த ஆண்டின் இறுதியில் உலகக்கிண்ண இருபது - 20 தொடரை நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மீண்டு வந்தார் பென் ஸ்ரோக்ஸ்



லண்டன், ஜூன் 09

காயத்திலிருந்து மீண்டு வந்துள்ள இங்கிலாந்தின் சகலதுறை வீரர் ஸ்ரோக்ஸ், இருபது -20 போட்டிகளில் பங்கேற்கவுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக பென் ஸ்ரோக்ஸ் விளையாடினார். பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியின்போது கிறிஸ் கெயில் அடித்த பந்தை பிடியெடுத்த சமயம் அவருக்கு விரல் முறிவு ஏற்பட்டது.

அவரை 3 மாதங்கள் ஓய்வு எடுக்கும்படி மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். இந்நிலையில் காயத்திலிருந்து மீண்டு வந்துள்ளார் ஸ்ரோக்ஸ். தற்போது பயிற்சியில் ஈடுபட்டு வரும் அவர் அடுத்தவாரம் உள்ளூர் இருபது - 20 போட்டி ஒன்றில் பங்கேற்கிறார்.

இதைத் தொடர்ந்து இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடரிலும் ஸ்ரோக்ஸ் பங்கேற்பார் என்று கூறப்படுகின்றது. (ஐ)



# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் மரியா காலிறுதிக்கு தகுதி!

பாரிஸ், ஜூன் 09

அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான சோபியா கெனினை கிரீஸின் மரியா சக்காரி வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் இரவு நடந்த நான்காவது சுற்று ஆட்டம் ஒன்றில், கிரீஸ் நாட்டின் மரியா சக்காரி (18ஆவது இடம்), அமெரிக்காவின் சோபியான கெனின் (5ஆவது இடம்) ஆகியோர் மோதினர்.

இதில், 6-1, 6-3 என்ற செற் கணக்கில் கெனினை இலகுவாக வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் மரியா சக்காரி காலிறுதிக்கு முன்னேறுவது இதுவே முதன்முறையாகும்.

மற்றைய ஆட்டங்களில் 17 வயது கோகோ கோப் (அமெரிக்கா), பார்போரா கிராஜ்சிகோவா (செக்குடியரசு) ஆகியோர் வெற்றி பெற்றனர். (ஐ)



# நடால், ஜொகோவிக் காலிறுதி ஆட்டத்தில்!

பாரிஸ், ஜூன் 09

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் நடால், ஜொகோவிக் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறினர்.

பிரெஞ்சு ஓப்பன் தொடர் பாரிஸில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த நான்காவது சுற்று ஆட்டங்களில் ஒன்றில், அனுபவ வீரர் நடால் 19 வயதான சின்னரை எதிர்த்தார். இதில் 7-5, 6-3, 6-0 என நேர் செற்களில் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றோர் ஆட்டத்தில் சேர்பியாவின் ஜொகோவிக் இத்தாலியின் முசெட்டியை எதிர்கொண்டார். ஐந்து சுற்றுக்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் 6-7 (7), 6-7 (2), 6-1, 6-0, 4-0 என்ற செற் கணக்கில் ஜொகோவிக் வென்றார்.

# இங்கிலாந்துக்கு எதிரான தொடர் ஒப்பந்தமின்றி வீரர்கள் பங்கேற்பு!

கொழும்பு, ஜூன் 09

புதிய ஒப்பந்தம் இல்லாமல் இங்கிலாந்து செல்வதற்கு இலங்கை அணி கிரிக்கெட் வீரர்கள் சம்மதித்துள்ளார்கள்.

இங்கிலாந்தில் 3 ஒருநாள், 3 இருபது - 20 ஆட்டங்களில் இலங்கை அணி விளையாடவுள்ளது. இதற்கான இலங்கை இருபது - 20 அணியின் தலைவராகவும் குசல் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் ஜூன் 23ஆம் திகதியும், இருபது -20 தொடர் ஜூன் 29 ஆம் திகதியும் ஆரம்பமாகின்றன. இதற்காக இலங்கை அணி நாளை இங்கிலாந்துக்கு புறப்படுகின்றது. இந்த நிலையில், வீரர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

எனினும், ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் இங்கிலாந்து தொடரில் விளையாடுவதற்கு வீரர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில், வீரர்களுக்கான புதிய ஒப்பந்தத்தை கிரிக்கெட் சபை அறிவித்தது. இதை ஏற்க வீரர்கள் மறுத்துவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



மிருசுவிலில் வீதியோரத்தில் அமைந்திருந்த

# பிள்ளையார் கோயில் விஷமிகளால் இடிப்பு

**தென்மராட்சி, ஜுன் 09**

**யாழ்., தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் வீதியோரத்தில் காணப்பட்ட சிறிய பிள்ளையார் கோயில் விஷமிகளால் இடிக்கப்பட்டுள்ளது.**

ஏ - 09 வீதியில் கொடிகாமத்துக்கும் மிருசுவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிய அளவில் குறித்த பிள்ளையார் ஆலயம் காணப்பட்டது.

இந்நிலையில், நேற்றுக் காலையில் மக்கள் அவதானித்த போது குறித்த ஆலயம் இடிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கொடிகாமம் பொலிஸார் நிலைமைகளை அவதானித்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கொரோனா தொற்றால் பிற்போடப்பட்டது நாகபூசணி அம்மன் வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம், ஜுன் 09

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று சூழ்நிலை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த ஆலய வருடாந்த மகோற்சவத்தை மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் நடத்துவதற்கு முன்னர் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.



இந்தநிலையில், நேற்றுக் காலை அவசரமாகக் கூடிய ஆலய அறங்காவலர் சபையினர் குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளனர். (இ)

# கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த தவறிவிட்டது அரசு

சபையில் பொன்சேகா எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜுன் 09.

“கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்மானங்களை அரசு சரியான நேரத்தில் எடுக்கத் தவறிவிட்டது. இந்த விடயத்தில் அரசின் தற்போதைய செயற்பாடு குதிரை பாய்ந்து போன பின்னர் லாயத்தை மூடுவது போன்றே இருக்கின்றது.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள் தொடர்பான சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இரசாயன உர நெருக்கடி நீண்ட வருடங்களாக உள்ளது. சகல அரச காலத்திலும் அதனை இறக்குமதி செய்துள்ளனர். இந்நிலையில், தற்போது விவசாயிகள் பெரும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் உரம் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் எதிர்பார்ப்புகள் மீறப்பட்டுள்ளன. அவர்கள் தற்போது நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கொரோனாவால் உயிர் அச்சுறுத்தலுடனேயே மக்கள் வாழ்கின்றனர். நாங்கள் கொரோனாவைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய தீர்மானங்களை சரியான நேரத்தில் எடுக்கவில்லை. உலகளாவிய தொற்றாக இதனை அறிவித்த போது நாங்கள் இதன் பாரதூர தன்மையைப் புரிந்துகொள்ளவில்லை. குதிரை பாய்ந்து போன பின்னர் லாயத்தை மூடுவதைப் போன்றதாகவே செயற்பாடுகள் இருக்கின்றன.

தடுப்பூசித் திட்டத்தை அமெரிக்காவில் கடந்த வருடம் மே மாதத்தில் இருந்தே ஆரம்பித்துள்ளனர். இந்த நாட்டில் அதுபற்றி நாங்கள் கூறும்போது அதனைக் கணக்கில் எடுக்கவில்லை. இப்போது அமெரிக்காவில் 55 வீதமானோருக்குத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அங்கு அதனை அவர்கள் வெற்றிகரமாக கட்டுப்படுத்துகின்றனர்.

இந்நிலையில், தற்போது அதிக விலைக்குத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. நாட்டில் 6 இலட்சம் பேருக்கு இரண்டாவது தடுப்பூசி இல்லாமல் இருக்கின்றது. அத்துடன் ஆயிரம் ரூபா பணம் கொடுத்து தடுப்பூசியைச் செலுத்தியவர்களும் உள்ளனர். இவ்வாறான விடயங்களுக்கு இடமளிக்கக் கூடாது” - என்றார். (இ)

# நுகர்வோர் சட்டத்தை ‘லிட்ரோ’ நிறுவனம் மீறியிருந்தால் நிச்சயம் வழக்கு தாக்கல்

வர்த்தக அமைச்சர் பந்துல உறுதி

கொழும்பு, ஜுன் 09

நுகர்வோர் சட்டத்துக்கு எதிரான வகையில் லிட்ரோ எரிவாயு நிறுவனம் செயற்பட்டிருந்தால் அந்த நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிதி முகாமைத்துவ பொறுப்பு திருத்த சட்டமூலம் மீதான விவாதத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. கபீர் ஹாசிம் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்

கபீர் ஹாசீம் எம்.பி. உரையாற்றும்போது, “நுகர்வோர் அதிகாரசபையின் அனுமதியில்லாமல் லிட்ரோ நிறுவனம் 18 லீற்றர் காஸ் சிலிண்டர்களைச் சந்தைக்கு விநியோகித்து நுகர்வோருக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அதிகார சபையின் தலைவர் தெரிவித்தும் அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றது. 18 லீற்றர் கேஸ் சிலிண்டரின் நிறை 9 கிலோவாகும் . இதன் மூலம் விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது. நுகர்வோர் அதிகார சபையின் சட்டத்துக்கு அமைய இதனைச் செய்ய முடியாது.

அத்துடன் இந்தவகையான சிலிண்டர் கடந்த இரண்டு மாதங்களாக சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. ஆனால், அரசோ - சம்பந்தப்பட்ட அமைச்சரோ இந்த நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடுக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது ஏன்?” என்று கேள்வி எழுப்பினார்.

இதன்போது பதிலளித்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன, “இலங்கையில் எரிவாயு சந்தை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக 5 பேர் கொண்ட அமைச்சரவை உப குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த உப குழுவின் தீர்மானத்துக்கமைய எரிவாயு சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அதன் பின்னர் தற்போது சந்தையில் இருக்கும் 18 லீற்றர் அடங்கிய காஸை சந்தையில் இருந்து அகற்றுவது தொடர்பில் தீர்மானிப்போம்.

அத்துடன் நுகர்வோர் அதிகார சபை சட்டத்துக்கு எதிராக எந்த நிறுவனம் செயற்பட்டாலும் அதற்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அந்தவகையில், லிட்ரோ காஸ் நிறுவனம் நுகர்வோர் அதிகார சபையின் சட்டத்துக்கு எதிராக செயற்பட்டிருந்தால், அந்த நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன்” - என்றார். (இ)

# யாழில் ஒரு மாதத்துக்கு உட்பட்ட 3 குழந்தைகளுக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜுன் 09

பிறந்து ஒரு மாதத்துக்கு உட்பட்ட மூன்று குழந்தைகளுக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 12 நாள் குழந்தைக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட குருநகரைச் சேர்ந்த 20 நாள் குழந்தைக்கும், தாய்க்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் முதிராக் குழந்தைகள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட 29 நாள் குழந்தைக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட இளவாலையைச் சேர்ந்த 9 மாதக் குழந்தைக்கும், மானிப்பாயைச் சேர்ந்த 10 மாதக் குழந்தைக்கும் அவர்களது பெற்றோருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (இ)

# விபசாரப் பெண்ணைப் போல் செயல்படுகின்றது இந்த அரசு

சபையில் கபீர் ஹாசிம் எம்.பி. சாடல்

கொழும்பு, ஜுன் 09

தற்போதைய அரசு ஒரு விபசாரப் பெண்ணைப் போன்று செயற்படுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாம் வெளிநாடுகளுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால், இலங்கை அரசுக்கு எதிரானவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த கபீர் ஹாசிம் எம்.பி., மேலும் கூறுகையில்,

“விபசாரத்தில் ஈடுபடும் பெண்ணொருவர் தனது தொழிலுக்காக ஒருவரைக் கவர்வதற்கு நன்றாக ஆடையுடுத்தி, வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்திக்கொண்டு வீதியில் நின்று அழைப்பார். அந்த விபசாரப் பெண் போன்றே தற்போதைய இந்த அரசும் பொய்க்கதைகளைக் கூறிக் கொண்டு நாட்டை வெளிநாடுகளுக்கு விற்று வருகின்றது.

நாம் அமெரிக்காவுக்கு, சீனாவுக்கு, இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்லர். வேறு நாடுகளுக்குக்கூட எதிரானவர்கள் அல்லர். ஆனால், இலங்கை அரசுக்கு எதிரானவர்கள். ஏனெனில், இந்த அரசுதான் இலங்கையை அழித்தும் விற்றும் வருகின்றது” - என்றார். (இ)

## அடித்து...

கொள்ளும் சவால்களைப் பொருட்படுத்தாமல், பொதுமக்கள் நலனைக் கருத்திக்கொண்டு செயற்பட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் உரையாற்றும்போதே, ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

நச்சுப் பொருட்கள் அற்ற உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு மக்களுக்கு உள்ள உரிமை, அரசின் கொள்கைத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது எனவும் அவர் கூறினார்.

சேதன உரப் பாவனையை ஊக்குவிக்கும் அரசின் திட்டத்துக்கு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டில் உரத் தட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் இடம்பெற்றாலும், அடுத்த போகம் வரை போதியளவு உரம் காணப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக் காட்டினார். இரசாயன உரத்தை தடை செய்வது முழு உலகுக்கும் நன்மை தரும் செயல் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சேதன உரம் தொடர்பில் விவசாயிகள் தெளிவுபடுத்தப்படாமை, தேவையற்ற பயத்துக்குக் காரணமாகியுள்ளது எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ)

## 2,637 பேருக்கு...

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 568 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## அரசியல்...

தொடர்ந்து முன்னெடுத்தார்கள்.

ஜேர்மனியிலிருந்து இவ்வருடம் இரண்டாவது தடவையாக இன்று இலங்கைத் தமிழ் அகதிகள் நாடு கடத்தப்படவுள்ளார்கள். இதற்கு எதிராக பிரேமன் மனித உரிமைகள் அமைப்பு, வேறு பல மனித உரிமைகள் அமைப்புகளுடன் இணைந்து ஜேர்மனியின் போட்சைம் (Pforzheim) நகரில் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாமுக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்தினம் மாலையிலிருந்து முன்னெடுத்து வருகிறது.

இரவு பகலாகத் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இந்தப் போராட்டம் இன்று மாலை வரை நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தார்கள். கடுமையான மழை மற்றும் குளிருக்கு மத்தியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. போராட்டத்தில் ஜேர்மன் நாட்டு மக்களும் பங்கெடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இன்று மாலை 4.00 மணி முதல் பிராங்போர்ட் விமான நிலையத்தை சூழ்ந்து போராட்டத்தை நடத்துவதற்கும் தமிழ் அமைப்புக்கள் திட்டமிட்டுள்ளன என்று தெரியவருகின்றது. பிராங்போர்ட் விமான நிலையத்தின் ஊடாகவே குறிப்பிட்ட 20 தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்களும் நாடுகடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னதாக கடந்த மார்ச் மாதம் 13ம் திகதி சுமார் 25 இலங்கைத் தமிழ் அகதிகளைப் பலத்த எதிர்ப்புகளின் நடுவிலும் ஜேர்மனி பலவந்தமாக நாடு கடத்தியிருந்தது. விமான நிலையத்தை சுற்றிவளைத்து தமிழர்கள் போராட்டம் நடத்திய போதிலும், இரகசியமாக அவர்கள் விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

இதேவேளையில், பிரேமன் மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த விராஜ் மென்டிஸ் எடுத்த முயற்சியில் இன்று நாடுகடத்தப்படவிருந்த செல்லத்துரை என்ற தமிழ் அகதி நேற்று மாலை விடுதலை செய்ப்பட்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

# 2023 வரையில் கொரோனா நீடிக்கும் 300 சிகிச்சை நிலையங்கள் தேவை

## ஐ.தே.க. தலைவர் ரணில்



கொழும்பு, ஜூன் 09

"பொதுமக்கள் வைரஸினால் உயிரிழப்பதை தவிர்ப்பதற்காக அடுத்த சில வருடங்களிற்கு கொரோனா வைரஸ் திட்டம் அவசியம். கொரோனா வைரஸ் 2023 வரை நீடிக்கும்" என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நாட்டு மக்களை பாதுகாக்கவேண்டும். ஆனால், இதுவரை தங்களை பாதுகாப்பதிலேயே அரசாங்கம் ஆர்வமாக உள்ளது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

"நோயாளிகளிற்கு சிகிச்சை வழங்குவதற்காக 300 சிகிச்சை நிலையங்களை அமைக்கவேண்டும். மாற்றமடைந்த வைரஸ்கள் உருவாகக்கூடும் என்பதால் வைரஸை எதிர்கொள்வதற்கான அடிப்படைகளை உருவாக்கவேண்டும். இதன் காரணமாக அரசாங்கம் கொரோனா வைரஸ் குறித்து கவனம் செலுத்த வேண்டும், அதனை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசியல் மயப்படுத்தவேண்டாம்" எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அமெரிக்க...

"இந்தத் தீர்மானம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும் அல்லது திருத்தப்பட வேண்டும். அமெரிக்க வெளிவிவகாரக் குழு அல்லது காங்கிரஸ் அதனைச் செய்வதற்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இவ்விடயத்தில் அவசரமாகத் தலையிட வேண்டும்" எனவும் இச்சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க காங்கிரஸில் கடந்த மாதம் 18 ஆம் திகதி இலங்கை குறித்த பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அது தற்போது வெளிவிவகாரக் குழுவின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ள நிலையிலேயே தமது கவலையை வெளிவிவகார அமைச்சர் நேற்று தெரிவித்திருக்கின்றார்.

இலங்கைக்கு அமெரிக்கா வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவுக்கும் இதன்போது நன்றி தெரிவித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, கடந்த 18 ஆம் திகதி காங்கிரஸ் உறுப்பினர் டிபோரா ரோஸ் (Deborah Ross) என்பவரால் கொண்டுவரப்பட் டுள்ள இலங்கை குறித்த தீர்மானத்தை யிட்டு இலங்கையின் ஆழ்ந்த கவலையை யும் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நல்லிணக்க முயற்சிகளுக்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை எனவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் குணவர்த்தன, இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் உடனடியாகத் தலையிட்டு, குறிப்பிட்ட பிரேரணையை திரும்பப் பெறச் செய்ய வேண்டும் அல்லது அதில் திருத்தங்களைச் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அமெரிக்க வெளிவிவகாரக் குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர்கள் மூலமாக, அல்லது சம்பந்தப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் மூலமாக அமெரிக்கா இதனைச் செய்ய வேண்டும் எனவும் அமைச்சர் குணவர்த்தன கேட்டுக்கொண்டார்.

## கொரோனா அபாயம்...

படும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

தற்போது காணப்படும் பரிந்துரைகளின்படி, அமுல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை அமுலாக்கப்பட்டிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனிமைப்படுத்தப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் 77 கிராம சேவகர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பகுதிகளில் கொரோனா பரவும் அபாயம் காணப்படுவதால் மக்களுக்குப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறினார். (இ)

# தரம் 1 அனுமதிக்கு விண்ணப்பிக்கும் காலக்கெடு ஜூலை 31 வரை நீடிப்பு

கொழும்பு, ஜூன் 09

கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவும் சூழ்நிலை காரணமாக 2022ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத்தில் அனுமதிப்பதற்கான விண்ணப்பிக்கும் காலக்கெடு எதிர்வரும் ஜூலை 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்கள் முன்னிலையில் கருத்துரைக்கும்போதே கல்வி அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாடசாலை பாடப்புத்தகங்கள் அழிவடைந்துள்ள நிலையில் மாணவர்களுக்குப் புதிய புத்தகங்களை வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்க கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் முடிவு செய்துள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபருக்குத் தகவல் தெரிவித்த பின்னர், அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக கல்வி அமைச்சுக்கு அறிவிக்கவேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

# ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் அஸ்ட்ராஸெனகா தடுப்பூசி!

கொழும்பு, ஜூன் 09

ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் அஸ்ட்ராஸெனகா தடுப்பூசி இலங்கைக்கு கொண்டுவரப்படும் என்று எதிர்பார்ப்பதாக நேற்று பாராளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

ஜூலை மாதம் கோவக்ஸ் திட்டம் மூலம் அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகளை எதிர்பார்க்கிறது என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

இலங்கைக்கு அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகளை வழங்குமாறு அமெரிக்காவுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தவிர, மேலும் சில நாடுகளுடன் இலங்கை பேச்சு நடத்தி, இரண்டாவது டோஸாக பயன்படுத்த வேண்டிய அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகளை பெறுகிறது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

# மட்டக்களப்பில் நேற்று மூவர் பலி! 186 தொற்றாளர்கள் அடையாளம்

மட்டக்களப்பு, ஜூன் 09

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றால் நேற்று மூவர் உயிரிழந்தனர். அத்துடன், 186 புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பிராந்திய சுகாதார பிரதி பணிப்பாளர் மருத்துவர் என்.மயூரன் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வாழைச்சேனை பிரதேசத்தில் இரண்டு பேரும் ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் காங்கயன்ஓடை கிராமத்தில் ஒருவருமாக மாவட்டத்தில் மூன்று பேர் கொரோனாவினால் நேற்று உயிரிழந்தனர்.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தோறும் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கும் வீதியில் அநாவசியமாக பயணம் செய்தோர், வர்த்தக நிலையங்களை திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டோர், நடமாடும் வியாபாரம் செய்தோர் ஆகியோருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனை மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் பிரகாரம் இவர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 33 பேரும் களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 பேரும் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேரும் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 பேரும், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில 27 பேரும் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 பேரும் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் செங்கலடி 01 நபரும் வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேரும் கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கிரான் 03 பேரும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 31 பேரும் ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேரும் பட்டிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேரும் பொலிஸார் 03 பேரும் சிறைச்சாலையில் 07 பேருமாக மொத்தம் 186 பேர் புதிய தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஐ)

## தகவல்கள்...

விக்கப்பட்டுள்ளது. பொய் பிரசாரம் செய்தால் உண்மை தொடர்பில் தீர்மானங்களை எடுக்க வேண்டும். ஆனால், இந்த நேரத்தில் சமூக வலைதளங்களை அச்சுறுத்தி நாட்டில் ஏற்படக் கூடிய நிலைமையை தடுப்பதற்காக அதாவது தகவல்கள் மக்களிடம் செல்வதை தடுப்பதற்காக அரசாங்கம் செயற்படுகின்றதா? தற்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக பதிலொன்றை எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

## யாழ். குடா...

தைச் சேர்ந்த 07 பேர் உட்பட வடக்கில் 28 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (இ - 03)

ஈழநாடு
Eelanadu

# 5 ஆயிரம் ரூபாயா அல்லது 2 ஆயிரம் ரூபாயா பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குகின்றீர்கள்?

## பாராளுமன்றில் அரசிடம் சிறிதரன் கேள்விக்கணை



**கொழும்பு, ஜூன் 09.**

**நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு வழங்குவது 5 ஆயிரம் ரூபாயா அல்லது 2 ஆயிரம் ரூபாயா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரினார்.**

**சபையில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்குவதாக அறிவித்துள்ள அரசு அதற்காக பல கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றது. ஆனால், இந்த 5 ஆயிரம் ரூபாயை ஒரு சமுர்த்திப் பயனாளி பெறுவதற்குச் சென்றால் உங்களுக்குச் சமுர்த்திப் பணமாக 3 ஆயிரம் ரூபாய் ஏற்கனவே வழங்கப்படுவதால் இந்த 5 ஆயிரம் ரூபாயில் 2 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்க முடியும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

அரசு பொதுவாகப் பயணத் தடையால் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது எனக் கூறுகின்றது. ஆனால், சமுர்த்திப் பயனாளிகளுக்கு 2 ஆயிரம் ரூபாயே வழங்கப்படுகின்றது. அப்படியானால் இடையில் உள்ள 3 ஆயிரம் ரூபாய்க்கு என்ன நடக்கின்றது? இதனால் மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் பிரச்னைகள் ஏற்படுகின்றன.

எனவே, நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு வழங்குவது 5 ஆயிரம் ரூபாயா அல்லது 2 ஆயிரம் ரூபாயா என் பதைத் தெளிவு படுத்த வேண்டும்" - என்றார். (இ)



# மக்களைப் பாதாளத்தில் தள்ளியுள்ளது இந்த அரசு

## சார்ள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 09

அரசின் பயணத் தடையால் கிடைத்த பலன் என்னவெனில், மக்களைப் பாதாளத்தில் தள்ளியது மட்டுமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் இன்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை குறித்த விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனாத் தடுப்பூசிகள் மூலம் மேற்குலக நாடுகள் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தியுள்ளன. ஆனால், இலங்கையால் இந்தக் கொரோனாத் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய முடியாமைக்கு அரசின் இராஜதந்திர கொள்கையின் பலவீனமே காரணமாகவுள்ளது.

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டனை எதிர்த்து சீனாவின் பக்கம் இலங்கை நிற்பதால் கொரோனாத் தடுப்பூசிகளை இந்த நாடுகள் இலங்கைக்கு வழங்கப் பின்னடிக்கின்றன. முதலில் தடுப்பூசிகளை வழங்கிய இந்தியா தற்போது வழங்க மறுத்துவிட்டது.

கொழும்புத் துறைமுகக் கடல் பரப்பில் கப்பல் ஒன்று தீப்பிடித்து எரிந்தபோது இலங்கை இந்தியாவின் உதவியைக் கேட்டது. ஆனால், இந்தியா முழு மனதுடன் உதவவில்லை. இந்தியா நினைத்திருந்தால் அந்தக் கப்பலின் தீயைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் தவறே இந்தியா இவ்வாறு வேண்டா வெறுப்பாக செயல்படக் காரணம்" - என்றார். (இ)

# மிளகு தோட்டத்துக்குள் நுழைந்த இளைஞர் துப்பாக்கிச் சூட்டில் பலி

கொழும்பு, ஜூன் 09

மாத்தளை, இரத்தோட்டைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 29 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


சட்ட விரோதமான முறையில் வேறு ஒருவரின் மிளகுத் தோட்டத்திற்குள் நுழைந்த போது, தோட்டத்தின் உரிமையாளரினால் இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தின் பின்னர் துப்பாக்கிச் சூட்டை நடத்தினார் எனக் கூறப்படும் சந்தேகநபர் துப்பாக்கியுடன் இரத்தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஆஜராகியுள்ளார். .

தனது தோட்டத்துக்குள் காட்டுப் பன்றி புகுந்துள்ளது என நினைத்தே தான் துப்பாக்கிச் சூட்டை நடத்தினார் என்று குறித்த நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# மரண அறிவித்தல்



மலர்வு
25.01.1940

உதிர்வு
31.05.2021

## கந்தசாமி பொன்னையா
### (கிளி அண்ணா)

யாழ். கோப்பாய் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Le Bourget ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி பொன்னையா அவர்கள் 31.05.2021 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற பொன்னையா - இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற கமலாதேவி, குமாரசாமி (கட்டை அப்பு - கொலண்ட்), பத்மநாதன் (பப்பி - இலங்கை), புஷ்பலீலாவதி (இலங்கை), சிதம்பரநாதன் (சின்னகிளி - இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயராஜா (ஜெயம் - இலங்கை, காலஞ்சென்ற ஜெயந்திரராசா (சிவம்), ஜெகசோதி (லண்டன்), காலஞ்சென்ற பரம்தாசான் (கண்ண ன்), பிறேமதாசன் (பிரான்ஸ்), லோகராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்திரகுமார் (செல்வன் - பிரான்ஸ்), உதயகுமார் உதயன் - பிரான்ஸ்), ஜெயகுமார் (ஜெயா - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்மிலி , கலைரூபி, ஜெயசீலி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜந்தா, சுகிர்தா, உதிஷ்கா, அனுசன், சதுர்சன், றுக்ஷான் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (10.06.2021) அன்று மதியம் 12.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை அன்னாரின் சொந்த இடமான டச்சு றோட் கல்வியங்காட்டில் உள்ள அவரது வீட்டில் காணொலி மூலம் நேரடியாக காண்பிக்கபட உள்ளது.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நன்பரகள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

முக்கிய குறிப்பு:- அனைவரும் சுகாதார முறைகளை பின் பற்றி கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் . கலந்து கொள்ள முடியாதவர்கள் கீழ்காணும்

YouTube L CAST TV

https://youtube.com/channel/UCzZbSKga5bR89Kw_KKQvaWg பார்வை இடலாம்.

தொடர்புகளுக்கு :
செல்வன் (மகன்) - 0033669454074
உதயன் (மகன்) - 0033664243551
ஜெயா (மகன்) - 0033651646624

தகவல் :
**குடும்பத்தினர்.**

## தீக்கிரையான 'எக்ஸ் - பிரஸ் பேர்ள்'

# கப்பலில் இருந்து இலங்கை முகவருக்கு அனுப்பிய மின்னஞ்சல்கள் யாவும் நீக்கம்

## அம்பலப்படுத்தினார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, ஜூன் 09

"எக்ஸ் - பிரஸ் பேர்ள்" கப்பல் இலங்கைக்குள் நுழைவது தொடர்பாக உள்நாட்டு முகவருக்கு கப்பல் தலைமை மாலுமி அனுப்பிய பல மின்னஞ்சல்கள் அனைத்தும் நீக்கப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

உலக சமுத்திர தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"வரலாற்றில் மிக மோசமான கடல் அழிவுக்கு மத்தியில் இலங்கையர்கள் உலக சமுத்திர தினத்தைக் கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பல தசாப்தங்கள் கடந்தாலும் மீளச் சரிசெய்ய முடியாத ஒரு பேரழிவு இலங்கையின் சமுத்திரப் பரப்பில் நிகழ்ந்துள்ளது.

பேரழிவை ஏற்படுத்திய "எக்ஸ் - பிரஸ் பேர்ள்" கப்பல் நாட்டின் கடற்பரப்புக்குள் எப்படி வந்தது என்பதற்கு அரசோ, பொறுப்பானவர்களோ இதுவரையில் பதில் அளிக்கவில்லை.

கப்பல் விடயத்தில் தொடர்புபட்ட அனைவருக்கும் பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்" - என்றார். (இ)

# ஐ.தே.க. உள்ளூராட்சி உறுப்பினர்களின் மனுக்கள் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 09

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனுக்களை, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

தமது கட்சி உறுப்புரிமை நீக்கப்படுவதைத் தடுத்து, உத்தரவு பிறப்பிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் 69 உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தாக்கல் செய்திருந்த மனுக்களே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன.

விஜித் மலல்கொட, எல்.டீ.பி. தெஹிதெனிய மற்றும் எஸ். துரைராஜா ஆகியோரை உள்ளடக்கிய மூவர் கொண்ட நீதியரசர் குழாமே இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது.

குறித்த மனுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியப் பிரமாணங்கள் உயர்நீதிமன்ற விதிமுறைகளை மீறுவதாக அமைந்துள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைப் பரிசீலனை செய்த நீதியரசர் குழாம், மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் நிராகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. (இ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஆம்பள,இஞ்சி இடுப்பழகி
ஆகிய திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-
சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-10
திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
7.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-
சமூக ஆர்வலர் சுகிர்தராஜ்



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
05.40 மணி : பாஷையூர் அந்தோனியார் நவநாள் திருப்பலி (நேரலை)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்